Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

தமிழ் Mirror

www.tamilmirror.lk

FRIDAY, JUNE 10, 2022

வெள்ளிக்கிழமை ஜூன் 10, 2022 | ஒளி: 08 கதிர்: 019 | பக்கம்:08 | வடக்கு,கிழக்கு | FREE



# முகக்கவசம் கட்டாயமில்லை

உட்புற மற்றும் வெளிப்புற நடவடிக்கைகளுக்கு முகக்கவசம் அணிவது இனி கட்டாயமில்லை என சுகாதார சேவை பணிப்பாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

# வடமாகாண மக்களே முன்னுதாரணம்

■ பா.நிரோஸ்

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள உணவு நெருக்கடி காலகட்டத்தில், விவசாய உற்பத்தியில் வடக்கு மாகாண மக்கள் முன்னுதாரணமாக இருப்பதாக விவசாயத்துறை அமைச்சர் மஹிந்த அமரவீர சபையில் தெரிவிததார்.

பாராளுமன்றத்தில் நேற்று (9) தமிழ் தேசிய கூட்டமைப்பின் வன்னி மாவட்ட எம்.பியான செல்வம் அடைக்கலநாதன் , விவசாயிகளுக்கு உடனடியாகவும், குறைந்த விலையிலும் உரத்தை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தால் மக்களை பட்டினியில் இருந்து காப்பாற்ற முடியும். எமது விவசாயிகள் பயிர்செய்கைகளை செய்வதற்கு மிக ஆர்வத்துடன் இருக்கின்றனர். ஆனால், 40 ஆயிரம் ரூபாய்க்கு உரத்தை வாங்க வேண்டியுள்ளது.

இந்தியா உரம் வழங்கவுள்ளதாக கூறப்படுகின்றது. இதனை துரிதமாக வழங்கினால் பட்டினிகளில் இருந்து மக்களை காப்பாற்ற முடியும். அதேபோன்று குறைந்த விலையில் அவற்றை வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என விவசாய அமைச்சர் மஹிந்த அமர வீரவிடம் கோரினார்.

இதற்கு விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர பதிலளிக்கையிலேயே, நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள உணவு நெருக்கடி கால கட்டத்தில் விவசாய உற்பத்தியில் வடக்கு மாகாண மக்கள் முன்னுதாரணமாக உள்ளனர். அவர்கள் மிகுந்த ஆர்வத்துடன் அதிகளவான விவசாய நிலங்களில் விவசாய செய்கைகளில் ஈடுபட்டுள்ளனர் என்றார்.

## மின்கட்டணம் அதிகரிக்கப்பட்டால்
# அதிகாரிகளின் வீடுகளை கொளுத்தி விடுவார்கள்

■ பா.நிரோஸ்

மின்சாரக் கட்டணத்தை அதிகரிக்க வேண்டுமென இலங்கை மின்சார சபை கோரிக்கை விடுத்துள்ளதாக தெரிவிக்கும் வலு சக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர, இக் கோரிக்கைக்கு ஏற்ப மின் கட்டணத்தை அதிகரித்தால் ஆளும் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களின் வீடுகளை மக்கள் எவ்வாறு கொளுத்தினார்களோ, அதுபோல ஏனைய நிறுவனங்களின் அதிகாரிகளின் வீடுகளையும் மக்கள் கொளுத்துவார்கள் என சபையில் எச்சரித்தார்.

தொடர்ச்சி P2

## எம்மை அதிகாரத்துக்குக் கொண்டுவந்த
# மக்களும் பொறுப்பு

- அரச பொறிமுறையில் மாற்றம் ஏற்பட வேண்டும்
- எனது இரண்டு நோக்கங்களும் நிறைவேற்றியுள்ளன
- நாட்டின் பொருளாதார நெருக்கடிக்கு நான் காரணமல்ல
- என்னாலேயே இன்றும் நிவாரணம் கிடைக்கின்றது
- எமது பரம அரசியல் எதிரிக்கு பிரதமர் பதவியை கொடுத்துள்ளோம்
- 21 ஆம் திருத்த சட்டத்துக்கு நான் எதிர்ப்பு
- இப்போதும் தேர்தல் ஒன்றை எதிர்கொள்ள நாம் தயார்




■ ஆர்.யசி

நாம் அதிகாரத்துக்கு வந்த பின்னர் தான், தவறுகள் இடம்பெற்றுள்ளன என்றால், இதன் அடிப்படை வரை தேடிச்சென்றால், எம்மை அதிகாரத்திற்கு கொண்டுவந்த பொதுமக்களும் பொறுப்பு கூற வேண்டும். அடுத்த தேர்தல் வரையிலேனும் அதிகாரத்தை எமக்குத் தாருங்கள். தேர்தலில் மக்கள் தீர்ப்பு எதுவாக இருந்தாலும் அதனை ஏற்றுக்கொள்கின்றோம் என பசில் ராஜபக்ஷ தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று (09) இடம்பெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இதனை கூறினார். அவர் மேலும் கூறுகையில்,

நபர்களை மாற்றாது, அரச பொறிமுறையில் மாற்றம் ஏற்பட வேண்டும் என்பதையே பலர் எதிர்பார்க்கின்றனர். எனினும், இதுவரை காலமாக நபர்களை மாற்றுவதையே முன்னெடுத்துள்ளோம். இனியாவது நபர்களை மாற்றாது பொறிமுறை மாற்றம் ஒன்று ஏற்படும் என எதிர்பார்க்கின்றேன். நான் நிதி அமைச்சராக செயற்பட்ட காலத்தில் என்னால் செய்ய முடிந்த அனைத்தையும் செய்து முடித்துள்ளேன்.

தொடர்ச்சி P2

## 6 குற்றச்சாட்டுகளில்
# எனக்கு விடுதலை

■ பா.நிரோஸ்



சட்டமா அதிபர் திணைக்களத்தில் எனக்கு எதிராக முன்வைக்கப்பட்ட 7 குற்றச்சாட்டுகளில் ஆறு குற்றச்சாட்டுகளில் என்னை நீதிமன்றம் விடுவித்துள்ளதாக சபையில் தெரிவித்த அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, ஒரே ஒரு குற்றச்சாட்டில் மாத்திரமே தான் குற்றவாளி எனத் தீர்ப்பு அளிக்கப்பட்டு உள்ளதாகவும் தெரிவித்தார்.

தனிப்பட்ட வர்த்தக கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பிலேயே எனக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டு, தீர்ப்பும் வழங்கப்பட்டுள்ளது. மாறாக பொதுமக்களின் சொத்துகளை கொள்ளையடி

தொடர்ச்சி P2

## எனது அலைபேசி அழைப்பு மணியிலும்
# காகம் பாடலே உள்ளது

ஆங்கிலத்தில் உரையாட முயற்சித்து வார்த்தை தவறினால் 'கபுட்டா' போன்று ஆகிவிடும், எனவே நான் சிங்களத்திலேயே உரையாற்றுகின்றேன் என, நேற்று (09) ஊடகவியலாளர் சந்திப்பில் பசில் ராஜபக்ஷ

தொடர்ச்சி P2

## இந்தியாவிடமிருந்து
# 65,000 மெட்ரிக் தொன் யூரியா வருகிறது

■ பா.நிரோஸ்



அடுத்த மாதத்தின் ஆரம்பத்தில், 65 ஆயிரம் மெட்ரிக் தொன் யூரியா உரம் இந்தியாவிடம் இருந்து இலங்கைக்கு கிடைக்கவுள்ளதாகத் தெரிவித்த அமைச்சர் மஹிந்த அமரவீர, மரக்கறி பயிர் செய்கைகளுக்குத் தேவையான உரம் தொடர்பில் பிரச்சினை காணப்படுவதாகவும் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

# ஜோன்ஸ்டனின் ரிட் மனுவை நிராகரிக்கவும்
## மேன்முறையீட்டு நீதிமன்றில் சட்டமா அதிபர் கோரிக்கை



முன்னாள் அமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தம்மைக் கைது செய்வதை தடுக்கக் கோரி, தாக்கல் செய்த ரிட் மனுவை நிராகரிக்குமாறு சட்டமா அதிபர், மேன்முறையீட்டு நீதிமன்றில் கோரிக்கை விடுத்துள்ளார். இந்த ரிட் மனு நேற்று (09) பரிசீலனைக்கு எடுத்து கொள்ளப்பட்டது.

இதன்போது சட்டமா அதிபர் சார்பில் ஆஜரான மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் விக்கும் டி அப்ரூ, மேற்கண்ட கோரிக்கை முன்வைத்தார்.

ஜோன்ஸ்டனைக் கைது செய்வதற்கான பிடியாணையை, கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றம், நேற்றுமுன்தினம் (08) பிறப்பித்திருந்ததையும் நீதிமன்றத்தின் கவனத்துக்கு அவர் கொண்டுவந்தார்.

தொடர்ச்சி P2

# 80 சதவீதமானோர் மலிவான உணவை உண்கின்றனர்

இலங்கையில் உள்ள குடும்பங்களில் 80 சதவீதத்துக்கும் அதிகமானோர் குறைந்த அல்லது மலிவான உணவை உண்கின்றனர் என ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P2




லாப் சமையல் எரிவாயு நீண்ட நாள்களுக்குப் பின்னர், விலை அதிகரிப்புடன் சந்தைக்கு விநியோகிக்கப்பட்டது. அந்த எரிவாயுவையும் பெற்றுக்கொள்ள நீண்ட வரிசையில் காத்திருக்கவேண்டிய நிலைமை மக்களுக்கு ஏற்பட்டுள்ளது. சாவகச்சேரி எரிவாயு விற்பனை நிலையத்துக்கு முன்பாக மக்கள் நேற்று (09) நீண்ட வரிசையில் கூடியிருந்தனர். (நிதர்ஷன் வினோத்)

# யானை தாக்கி 6 மாத ஆண் சிசு மரணம்

■ கனகராசா சரவணன்



அம்பாறை, அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவிலுள்ள பள்ளக்காடு பிரதேசத்தில் யானை தாக்குதலால் 6 மாத ஆண் சிசு நேற்று முன்தினம் (08) புதன்கிழமை உயிரிழந்துள்ளதென அக்கரைப்பற்று பொலிஸார் தெரிவித்தனர்

தொடர்ச்சி P2

# "பாராளுமன்றுக்கு நான் செல்லாக் காசு"

■ ஆர்.யசி

இனிமேல் பாராளுமன்றத்துக்கு நான் அவசியம் இல்லை என்றே கருதுகின்றேன். எனவே தேசிய பட்டியல் உறுப்புரிமையில் இருந்தும் விலகுகிறேன். இனிமேல் அரச நிர்வாகத்தின் எந்தவொரு செயற்பாட்டிலும் நான் ஈடுபட மாட்டேன் என பசில் ராஜபக்ஷ தெரிவித்தார். மக்கள் மீண்டும் என்னை அழைத்தால் வருவேன். ஆனால், மக்கள் அழைப்பார்கள் என நினைக்கவில்லை எனவும் அவர் கூறினார்.

தொடர்ச்சி P2

# இதுவே உண்மையான அரச பயங்கரவாதம்



■ பா.நிரோஸ்

நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமைகளை காட்டி, மக்களை அச்சத்திற்குள் கொண்டு சென்று புதுப்பிக்கத்தக்க சக்தி திட்டங்கள் போன்ற விடயங்களுக்காக சட்டத் திருத்தங்களை மேற்கொண்டு கொள்ளையடிப்பதற்கு வழி வகுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது, இதுவே உண்மையான அரச பயங்கரவாதம் என ஜே.வி.பியின் பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத்தே தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று (9) நடைபெற்ற மின்சார

தொடர்ச்சி P2



# நன்றி, வணக்கம்!

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் பசில் ராஜபக்ஷ தனது இராஜினாமாக் கடிதத்தை பாராளுமன்ற செயலாளர் நாயகத்திடம் நேற்று (9) கையளித்தார். அவரது வெற்றிடத்துக்கு பிரபல வர்த்தகர் தம்மிக பெரேரா நியமிக்கப்படலாம் என அறியமுடிகின்றது.

## 84 மேலதிக வாக்குகளால்
# இலங்கை மின்சார திருத்தச் சட்டமூலம் நிறைவேற்றப்பட்டது

■ பா.நிரோஸ்

இலங்கை மின்சார திருத்தச் சட்டமூலத்தின் இரண்டாம் வாசிப்பு 84 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது. இத்திருத்தச் சட்டமூலத்துக்கு ஆதரவாக 120 வாக்குகளும் எதிராக 36 வாக்குகளும் செலுத்தப்பட்டன. எனினும், 13 பாராளுமன்ற உறுப்பினர்கள் வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவில்லை. பிரதமர் ரணில்

தொடர்ச்சி P2

# சீனா, இந்திய தூதுவர்களுடன் ஜனாதிபதி கலந்துரையாடினார்

சீனா மற்றும் இந்திய தூதுவர்களை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, நேற்று (09) தனித்தனியே சந்தித்து கலந்துரையாடினார்.

தொடர்ச்சி P2





# கணவனுக்கு முன் மனைவி பறந்தார்

முன்னாள் நிதியமைச்சரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான பசில் ராஜபக்ஷ, இன்னும் சில நாள்களில் அமெரிக்காவுக்கு பறந்துவிடுவார் என தகவல்கள் வெளியாகியிருந்தன.

இந்நிலையில், அவரது மனைவி புஷ்பா ராஜபக்ஷ, கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் ஊடாக, அமெரிக்காவுக்கு சென்றுள்ளார்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

## அதிகாரிகளின் வீடுகளை...

வருமானமாக வெறும் 250 பில்லியன் ரூபாயே பெறப்படுகிறது. இவ்வாறான நிலையில் எஞ்சிய 500 பில்லியனை ரூபாயை ஈடு செய்யும் வகையில் மின் கட்டணத்தில் திருத்தங்களை மேற்கொள்ள வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது எனவும் கூறினார்.

எவ்வாறாயினும் இக்கோரிக்கைக்கு ஏற்ப மின் கட்டணம் அதிகரிக்கப்பட்டால் மின் கட்டணம் 300 - 400 சதவீதம் வரையில் அதிகரிக்கப்பட வேண்டிய நிலை ஏற்படும். எனவே, மின் கட்டணத்தை அதிகரிக்காது உற்பத்தி செலவைக் குறைப்பதற்கு புதுப்பிக்கத்தக்க சக்தியை பயன்படுத்த வேண்டும் என அவர் கூறினார்.

மேலும் மின் கட்டணம் அதிகரிக்கப்பட்டால் ஆளுங்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் வீடுகள் கொளுத்தப்பட்டதைப்போல், ஏனைய நிறுவனங்களின் அதிகாரிகளின் வீடுகளையும் மக்கள் கொளுத்துவார்கள் எனவும் தெரிவித்தார்.

## காகம் பாடலே உள்ளது

எனக்கு கொடுத்துள்ள பட்டப்பெயர் நன்றாக உள்ளது, விமர்சிக்கும் அளவிற்கு காகம் தீய பறவையும் அல்ல, எனவே யார் என்ன கூறினாலும் நான் வைராக்கியத்தை கொட்டப்போவதில்லை. எனது தொலைபேசி அழைப்புமணியில் கூட அந்த பாடல் தான் உள்ளது. எனது பெயர் கூறப்படுவதால் அழைப்பு வரும்போது பசில்... பசில்.. பசில் ..பசில் ..என்றே கேட்கும் எனவும் நகைச்சுவையாக கூறினார்.

## 65,000 மெட்ரிக் டொன்...

உரம் தொடர்பில் நேற்று (9) பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளித்து உரையாற்றும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

உரத்தை வெளிநாடுகள் ஏற்றுமதி செய்வதை நிறுத்தியுள்ளனர். எனினும் இந்தியா எமது நட்பு நாடு என்பதால் அந்நாட்டுக்கு இறக்குமதி செய்யப்படும் உரத்தில், 65 ஆயிரம் மெட்ரிக் டொன் உரத்தை எமக்கு வழங்குவதற்கு இணங்கியுள்ளது. இதற்கான அமைச்சரவை பத்திரம் சமர்பிக்கப்பட்டுள்ளது.

எனவே அடுத்த மாதத்தின் ஆரம்பத்தில் இந்த உரம் இலங்கைக்கு கிடைக்கும். உரம் கிடைத்ததும், அதனை 10 ஆயிரம் ரூபாய்க்கு நெல் விவசாயிகளுக்கு பகிர்ந்தளிக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும், இந்தியாவிலிருந்து கிடைக்கும் 65 ஆயிரம் மெட்ரிக் டொன் உரத்தில், 10 ஆயிரம் மெட்ரிக் டொன்னை தேயிலை பயிர்ச்செய்கைக்கு வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் இதன்போது தெரிவித்தார்.

## 80 சதவீதமானோர் மலிவான...

உலக உணவுத் திட்டம் மாதாந்த அறிக்கையில் மேற்கண்ட விவரம் வெளியாகியுள்ளது. இது ஊட்டச்சத்து குறைபாட்டின் அபாயத்தை உயர்த்தியுள்ளதாகவும் கூறியுள்ளது.

தொடர்ச்சியாக இரண்டு பருவங்களில் இருந்து நெல் அறுவடை குறைவதால் உணவுப் பாதுகாப்பின்மை அதிகரிக்கும் என்றும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாணயத்தின் பெறுமதி வீழ்ச்சி காரணமாக இறக்குமதி செய்யப்பட்ட அரிசியின் விலை 20 சதவீதத்தால் அதிகரித்துள்ளதாகவும், வழங்கல் பற்றாக்குறை மற்றும் அதிக உற்பத்திச் செலவு காரணமாக உள்ளூர் அரிசி வகைகளின் விலை 6 சதவீதத்தால் அதிகரித்துள்ளதாகவும் அவ்வறிக்கையில் மேலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## இலங்கை மின்சார...

விக்ரமசிங்க சட்டமூலத்துக்கு ஆதரவாக வாக்களித்திருந்தார்.

மின்சார திருத்த சட்டமூலம் மீதான விவாதம் நாள் முழுவதும் இடம்பெற்ற நிலையில் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் எம்.பியும் எதிர்க்கட்சிகளின் பிரதம கொறடாவுமான லக்ஷ்மன் கிரியெல்ல திருத்த சட்ட மூலத்தை நிறைவேற்ற வாக்கெடுப்பை கோரினார்.

அரசாங்கத்திலிருந்து விலகி சுயாதீனமாக இயங்கும் 11 கட்சிகளை சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்களான வாசுதேவ நாணயக்கார விமல் வீரவன்ச உதய கம்மன்பில உள்ளிட்டோர் வாக்கெடுப்பில் கலந்துகொள்ளவில்லை. இலங்கை தொழிலாளர் காங்கிரசின் பாராளுமன்ற உறுப்பினர்களான ஜீவன் தொண்டமான், மருதபாண்டி ராமேஸ்வரன் ஆகியோரும் சட்டமூலத்திற்கு ஆதரவாக வாக்களித்துள்ளனர்.

அரசாங்கத்தில் இணைந்து அமைச்சுப் பொறுப்புக்களைப் பெற்ற எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களான ஹரின் பெர்னாண்டோ மனுஷ நாணயக்கார ஆகியோரும் சட்டமூலத்திற்கு ஆதரவாக வாக்களித்திருந்தனர்.

## "பாராளுமன்றுக்கு நான்...

கொழும்பில் நேற்று (9) ஏற்பாடு செய்யப்பட்டிருந்த விசேட செய்தியாளர் சந்திப்பின் போதே அவர் இதனை கூறினார். அவர் மேலும் கூறுகையில்,

கட்சியின் தீர்மானத்திற்கு அமைய என்னை தேசிய பட்டியல் உறுப்பினராக நியமித்தனர். அத்துடன் நிதி அமைச்சராகவும் ஜனாதிபதி என்னை நியமித்தார். ஆனால் ஒரு சில மாதங்களுக்கு முன்னர் நிதி அமைச்சுப்பொறுப்பை துறந்தேன். இன்றைய தினம் (நேற்று) தேசிய பட்டியல் உறுப்புரிமையில் இருந்தும் விலகுகிறேன். கட்சியில் தகுதியான ஒருவரை பாராளுமன்றத்திற்கு நியமிக்க வாய்ப்பளிக்கவே இந்த முடிவை எடுத்துள்ளேன் என்றார்.

அரச நிருவாகம் என்பது வேறு, அரசியல் என்பது வேறு என்றே நான் நம்புகின்றேன். ஆகவே இன்றில் இருந்து அரச நிருவாகத்தின் எந்தவொரு செயற்பாட்டிலும் நான் ஈடுபட மாட்டேன். ஆனால் தொடர்ந்தும் அரசியலில் இருப்பேன். அதனை என்னால் நிறுத்த முடியாது, தேவைப்படும் நேரத்தில் அரசியல் செயற்பாடுகளில் ஈடுபடுவேன். மக்கள் மீண்டும் என்னை அழைத்தால் வருவேன், ஆனால் மக்கள் அழைப்பார்கள் என நினைக்கவில்லை என்றார்.

இனிமேல் பாராளுமன்றத்திற்கு நான் அவசியம் இல்லை என்றே கருதுகின்றேன். எனது குடும்பம் அமெரிக்காவில் வசிக்கின்ற காரணத்தினால் நானும் செல்வேன்.

# மக்களும் பொறுப்பு





நான் இலங்கைக்கு வந்த வேளையில் இரண்டு மிகப்பெரிய குற்றச்சாட்டுக்களை என்மீது சுமத்தியிருந்தனர். ஒன்று ஊழல் குற்றச்சாட்டு, அதில் இருந்து விடுபட வேண்டும். அதேபோல் மஹிந்த ராஜபக்ஷவின் தோல்விக்கு நானே காரணம் என்ற விமர்சனம் இருந்தது. அவரை மீண்டும் மக்கள் ஏற்றுக்கொள்ளும் தலைவராக்க வேண்டும் என்ற நோக்கம் இருந்தது. எனது இரண்டு நோக்கங்களும் நிறைவேறியுள்ளது.

நாட்டின் பொருளாதார நெருக்கடிக்கு நான் காரணமல்ல, இந்த நாட்டிற்கு இன்று ஏதேனும் ஒன்று கிடைக்கின்றது என்றால் அது நான் நிதி அமைச்சராக பெற்றுக்கொடுத்த வேலைத்திட்டத்தினால் மட்டுமேயாகும். இன்று எண்ணெய், மா, உரம் இறக்குமதி செய்வதும் நான் கலந்துரையாடி பெற்றுக்கொண்ட கடன் சலுகைகளினால் தான் என்பதை மறந்துவிட வேண்டாம். அதேபோல் ஐ.எம்.எப்புடனும் நானே கலந்துரையாடினேன். அதற்கமையவே அடுத்தகட்ட பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டன.

நாட்டை மீட்டெடுக்க வேண்டும். அதற்காக ஜனாதிபதி கடமையாற்றியாக வேண்டும். இப்போது எமது பரம அரசியல் எதிரிக்கு பிரதமர் பதவியை கொடுத்துள்ளோம். ஆகவே அனைவரும் ஒன்றிணைந்து நாட்டை மீட்டெடுக்க வேண்டும். மேலும், 21 ஆம் திருத்த சட்டத்தை நான் எதிர்ப்பது எனது தனிப்பட்ட நிலைப்பாடாகும். அதேபோல் 69 இலட்சம் மக்களின் ஆணையை பெற்ற ஒருவரது அதிகாரங்களை 2 இலட்சம் வாக்குகள் பெற்ற ஒருவருக்கு வழங்குவது நியாயமில்லை. இப்போதுள்ள பிரதமர் மக்கள் பிரதிநிதியும் அல்ல. 21 ஆம் திருத்தத்திற்கு உரிமையாளர் யார் என்ற கேள்வியும் உள்ளது.

இரட்டை பிரஜாவுரிமை கொண்டவர்கள் அரசியலில் இருக்கலாம். அதுமட்டுமல்ல வெளிநாடுகளில் வாழும் சகல இலங்கையர்களுக்கும் இரட்டை பிரஜாவுரிமை வழங்க வேண்டும். இந்த நாட்டில் மூன்று தடவைகள் ராஜபக்ஷவினரை மக்கள் ஆட்சிக்கு கொண்டுவந்துள்ளனர் என்பதை மறந்துவிட வேண்டாம்.ஆகவே எதிர்வரும் காலங்களில் எதுவும் நடக்கலாம். அதுமட்டுமல்ல, இப்போதும் தேர்தல் ஒன்றை எதிர்கொள்ள நாம் தயாராகவே உள்ளோம். அடுத்த உள்ளோராட்சி தேர்தலில் நாம் களமிறங்குவோம்.

## யானைதாக்கி 6 மாத...



திடீரென வந்த காட்டுயானை மரத்தின் கீழ் படுத்திருந்த சிசுவை தாக்கியுள்ளது.

சிசுவின் உடற்பாகங்கள் சிதற, சம்பவ இடத்தில் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளது

இதனையடுத்து உயிரிழந்த குழந்தையை அங்கிருந்து மீட்டு அக்கரைப்பற்று ஆதர வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளதாக தெரிவித்த அக்கரைப்பற்று பொலிஸார் மேலதிக விசாரணைகளையும் மேற்கொண்டு வருவதாக தெரிவித்தனர்.

## இதுவே உண்மையான...



சட்டத் திருத்தங்கள் மீதான விவாதத்தில் உரையாற்றிய போதே இவ்வாறு தெரிவித்தார்.

புதுப்பிக்கத்தக்க சக்திக்கு நாங்கள் எதிரானவர்கள் அல்ல. சுற்றாடலை பாதுகாப்பதற்காக சூரிய மற்றும் நீர் சக்திகள் மூலமான திட்டங்கள் அவசியமாகும். உண்மையில் இந்தத் திட்டங்களை இப்போது செய்வது ஏற்பட்டுள்ள நெருக்கடிகளை காட்டி திருடர்களுக்கு திருடுவதற்காக பாதையை அமைப்பதற்காகவே முயற்சிக்கின்றனர். இந்த வேலைத்திட்டத்திற்காக விலை மனுக் கோரல் முறைமையை பின்பற்றாதது ஏன்? டொலர் அதிகரிக்கும் போது பழைய மதிப்பீட்டு விலைக்கு இப்போது செய்ய முடியாது என்பது உண்மையே. ஆனால் அதனை காட்டி திருட்டை செய்ய முயற்சிக்கின்றனர். இங்கேயே உண்மையான பயங்கரவாதம் உள்ளது. திருட்டுக்கு பாதை அமைப்பதே அது. இதில் இருக்கும் உண்மைகளை மூடி மறைக்க முடியாது என்றார்

## சீனா மற்றும் இந்திய தூதுவர்களுடன் ஜனாதிபதி கலந்துரையாடினார்

கலந்துரையாடியிருந்ததுடன் இவ்விரு நாடுகளின் முழுமையான ஒத்துழைப்புக்களை எதிர்பார்ப்பதாகவும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார். அத்துடன் இலங்கைக்கு உதவும் அவர்களின் சாதகமான பதில்களையும் ஜனாதிபதி வரவேற்றுள்ளதாக தெரிவித்துள்ளார்.

மத்திய கிழக்கு நாடுகளின் தூதுவர்களுக்கிடையிலான சந்திப்பு அண்மையில் கொழும்பு கோட்டை ஜனாதிபதி மாளிகையில் இடம்பெற்றது. இலங்கையின் தற்போதைய பொருளாதார, சமூக மற்றும் அரசியல் நிலைமைகள் குறித்து ஜனாதிபதி அவர்கள் தூதுவர்களிடம் விளக்கினார்.

தற்போதைய நிலைமையைத் தீர்ப்பதில் இலங்கைக்கு தமது ஆதரவை வழங்குமாறு அனைத்து நாடுகளையும் கேட்டுக்கொண்ட ஜனாதிபதி, இதுவரை அந்நாடுகள் வழங்கிய உதவிகளுக்கு தமது நன்றியைத் தெரிவித்தார்.

## இலாபத்தில் ஒரு பகுதி வடக்குக்குக் வேண்டும்

பா.நிரோஸ்

வடக்கில் நடைமுறைப்படுத்தப்படவுள்ள மின் உற்பத்தி திட்டங்களை எந்த நிறுவனத்துக்கு வழங்கினாலும் உற்பத்தி மூலம் கிடைக்கும் இலாபத்தில் ஒரு பகுதியை வடக்கு அபிவிருத்திக்காக வழங்குவதாக அந்த ஒப்பந்தங்களில் உறுதிப்படுத்த வேண்டும் என தமிழ் தேசியக் கூட்டமைப்பின் யாழ் மாவட்ட எம்.பி.யான தர்மலிங்கம் சித்தார்த்தன் சபையில் வலியுறுத்தினார்.

பாராளுமன்றத்தில் நேற்று (9) இடம்பெற்ற மின்சார திருத்தச் சட்டமூலம் மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார்.



வடக்கில் மன்னார் தொடக்கம் காங்கேசன்துறை வரையான பிரதேசங்களில் காற்றாலை மின் உற்பத்தி திட்டங்களை மேற்கொள்வதற்கு பொருத்தமான இடங்கள் உள்ளதாக நிபுணர்களால் கண்டறியப்பட்டுள்ளது. அதற்கிணங்க தற்போது பல்வேறு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்த நிலையிலேயே அவ்வாறான திட்டங்களுக்கு கேள்விக்கோரல் வழங்குவதா இல்லையா என சர்ச்சைகள் எழுந்துள்ளன. நாட்டில் தற்போது நிலவும் நெருக்கடி நிலையில் மின்சாரத் தேவையின் அவசியத்தை கருத்திற்கொண்டு அது தொடர்பில் சிறந்த தீர்மானங்கள் எடுக்கப்பட வேண்டும். அதன்போது இயற்கை வளங்களைப் பயன்படுத்தி குறைந்த செலவில் உற்பத்தி செய்யக்கூடிய மின்சாரம் தொடர்பில் கவனம் செலுத்தப்படவும் வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

அதேவேளை, வடக்கில் மின் உற்பத்தித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படும்போது ஏற்படும் பாதிப்புகள் தொடர்பில் மக்கள் அச்சத்துடன் காணப்படுகின்றனர்.

## முகக்கவசம் கட்டாயமில்லை

கொரோனா வைரஸை கட்டுப்படுத்தவும், அதிலிருந்து தப்பிக்கவும் உலகளாவிய ரீதியில் முகக்கவசம் அணிவது கட்டாயமாக்கப்பட்டு இருந்தது.

தற்போது கொரோனாவின் வேகம் மற்றும் பரவுதல் இலங்கையில் முழுமையாக கட்டுப்படுத்தப்பட்டுள்ளதால், மக்கள் முகக்கவசம் அணிவதிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளனர்.

## எனக்கு விடுதலை

த்ததாக எனக்கு எதிராக எந்த வழக்கும் பதியப்படவில்லை என்றார்.

எனக்கு எதிராக சட்டமா அதிபரால் ஏழு குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன. இந்த ஏழு குற்றச்சாட்டுகளில் ஆறு குற்றச்சாட்டுகளிலிருந்து நீதிமன்றம் என்ன விடுவித்துள்ளது. ஒரே ஒரு

குற்றச்சாட்டுக்கு மட்டுமே எனக்கு தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. இதற்கு எதிராக மேன்முறையீடு செய்துள்ளேன் எனவும் தெரிவித்தார்.

நீதிமன்றங்களால் வழங்கப்படும் தீர்ப்புகளுக்கு எதிராக மேன்முறையீடு செய்வதற்கான உரிமை உள்ளது. இதனை தெரிந்துகொள்ளாது பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் எனக்கு எதிரான குற்றச்சாட்டுகளை முன்வைத்து வருகின்றனர் எனவும் தெரிவித்தார்.

## ஜோன்ஸ்டனின் ரிட் மனுவை...

காலிமுகத்திடல் "கோட்டா கோ கம" மற்றும் அலரிமாளிகைக்கு முன்னால் அமைக்கப்பட்டிருந்த "மைனா கோ கம" ஆகியவற்றில் அமைதியான முறையில் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல் தொடர்பில், சந்தேகநபராகக் கருதப்படும் தன்னைக் கைது செய்வதைத் தடுக்கும் உத்தரவைப் பிறப்பிக்குமாறே மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள ரிட் மனுவின் ஊடாக, முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ கோரியிருந்தார்.

குறிப்பிட்ட சம்பவம் தொடர்பில் சட்டமா அதிபரின் ஆலோசனைக்கு அமைய தன்னை சந்தேக நபராக பெயரிட்டுள்ள குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினர், தன்னைக் கைது செய்ய தயாராகி வருவதாகவும் தனது ரிட் மனுவில் சுட்டிக்காட்டியிருந்தார்.

மே. 9 ஆம் திகதிய தாக்குதல் சம்பவம் தொடர்பான நீதவான் விசாரணை, கொழும்பு கோட்டை நீதவான் திலின கமகே முன்னிலையில் கடந்த 1ஆம் திகதி முன்னெடுக்கப்பட்ட போது, சீ.ஐ.டி சார்பில் ஆஜரான மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் ஆயிஷா ஜினசேன, முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ மைனா கோ கமவில் போராட்டக்காரர்களை தாக்குவதற்கு மக்களைத் தூண்டும் வகையில் உரை நிகழ்த்தியதாக மன்றின் கவனத்துக்குக் கொண்டுவந்தார்.

சாட்சியங்களை ஆராய்ந்ததன் பின்னர், ஜோன்ஸ்டன் எம்.பி, கொழும்பு மாநகர சபை உறுப்பினர் மஹிந்த கஹந்தகம உட்பட மேலும் மூவரை சீ.ஐ.டியினர் சந்தேகநபர்களாகப் பெயரிட்டனர். அதன்பின்னர், ஜோன்ஸ்டன் பெர்ணான்டோ தலைமறைவாகிவிட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், அவரது ரிட் மனுவை பரிசீலனைக்கு உட்படுத்திய மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்களான யோஹித ராஜபக்ஷ, தம்மிக்க கனேபொல ஆகியோர், நேற்று(09) இரவு 8 மணிக்கு முன்னர் கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜராகுமாறும் மேன்முறையீட்டு கட்டளையிட்டிருந்தனர்.

அதனடிப்படையில் கோட்டை நீதிமன்ற நீதவான் திலின கமகே முன்னிலையில் தனது சட்டத்தரணிகளுடன் நேற்று (09) மாலை ஆஜரான ஜோன்ஸ்டன், சற்று நேரத்தில் வெளியேறிவிட்டார்.

## கணவனுக்கு முன் மனைவி பறந்தார்

நேற்று (09) அதிகாலை புறப்பட்டுச் சென்ற எமிரேட்ஸ் ஏயார்லைன்ஸ் மூலமாக டுபாய் ஊடாக அமெரிக்கா சென்றுள்ளதாக விமான நிலைய தகவல்கள் தெரிவிக்கின்றன.




படத்தில் இடமிருந்து வலம்: சிட்டி இன் நிறுவன விவகாரங்களின் தலைவர் ஷனகா வடுகே, சிட்டி பேங்க் இன் முகாமைத்துவப் பணிப்பாளரும் இலங்கை நாட்டுக்கான பிரதம நிறைவேற்று அதிகாரியுமான ரவின் பஸ்நாயக்க, டயலொக் ஆசிஆட்டா பிஎல்சியின் குழும பிரதம நிறைவேற்று அதிகாரி சுபுன் வீரசிங்ஹ, டயலொக் ஆசிஆட்டா பிஎல்சி இன் குழும தலைமை நிதி அதிகாரி Hong Zhou Wong, சர்வோதய சிரமதான சங்கத்தின் திட்ட முகாமை பிரிவு இயக்குநர் முஹமது நிஸ்வி.

# ‘மனிதநேய ஒன்றிணைவு’

## அவசரகால நிவாரண செயற்றிட்டத்துடன் சிட்டி இணைகின்றது

## அதிகம் பாதிக்கப்பட்ட 200,000 குடும்பங்களுக்கு அவசர நிவாரணம்

தற்போது பொருளாதார நெருக்கடியால், கடுமையாக பாதிக்கப்பட்டுள்ள குடும்பங்கள், சமூகங்களுக்கு அவசரகால நிவாரணங்களை வழங்குவதை நோக்கமாகக் கொண்டு, டயலொக் ஆசிஆட்டா பிஎல்சி, MAS Holdings, Hemas Holdings PLC, CBL குழுமம், Sunshine Holdings PLC, சர்வோதய சிரமதான சங்கம், PwC ஸ்ரீ லங்கா ஆகியவற்றால் முன்னெடுக்கப்படுகின்ற ‘மனிதநேய ஒன்றிணைவு’ திட்டத்துடன் சிட்டி இணைந்து கொண்டது.

நிறைவேற்றும் பங்குதாரர் சர்வோதய மற்றும் பொறுப்புக்கூறல் பங்குதாரர் PwC ஸ்ரீ லங்கா உள்ளிட்ட ஒத்த எண்ணம் கொண்ட பங்காளிகளுடன் கைகோர்த்து, டயலொக், MAS, Hemas, CBL, Sunshine மற்றும் சிட்டி மூலம் நிதியளிக்கப்படும் ‘மனிதநேய ஒன்றிணைவு’ முயற்சியானது, 200,000 க்கும் மேற்பட்ட பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு அவசரகால நிவாரணம் வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

25 மாவட்டங்களிலும் 50,000 க்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு இன்றுவரை அவசரகால நிவாரணம் வழங்கப்பட்டுள்ள நிலையில், இது தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும். மேலும், பயனுள்ள பொருளாதார முன்மாதிரி திட்டத்தினூடாக, நிலையான நலன் பரிமாற்ற முறையொன்று நாட்டில் நிறுவப்படும்வரை 60-90 நாள்களுக்கு இந்த ‘மனிதநேய ஒன்றிணைவு’ நிவாரண வேலைத்திட்டமானது தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும்

சிட்டி இன் முகாமைத்துவப் பணிப்பாளரும் இலங்கை நாட்டுக்கான பிரதம நிறைவேற்று அதிகாரியுமான ரவின் பஸ்நாயக்க கருத்து தெரிவிக்கையில், “தற்போதைய நிதி நெருக்கடியின் தாக்கம் நாடு முழுவதும் கடுமையாக உணரப்பட்டுள்ள நிலையில், போராட்டங்கள் முன்னெப்போதையும் விட அதிகமாககியுள்ள நிலையில், உணவுப் பொருட்களின் விலைகள் உயர்ந்து வரும் நிலையில், மோசமாகப் பாதிக்கப்பட்டவர்களுக்கு உணவு உதவி என்பது மிகவும் அத்தியாவசியமான ஒன்றாக காணப்படுகின்றது. இதன் காரணமாகவே சிட்டி வங்கி மனிதாபிமான முயற்சியான ‘மனிதநேய ஒன்றிணைவு’ உடன் இணைந்து கொள்வதற்கு முடிவு செய்தது. நாங்கள் எங்கள் பொறுப்பை உணர்ந்து, நமது மக்களின் சுமையை குறைக்க ஒத்த எண்ணம் கொண்ட பெரு நிறுவனங்கள் இணைந்து செயற்பட வேண்டிய நேரம் இது என்று நம்புகிறோம். இந்தத் திட்டத்தைத் தொடர்ந்து முன்னெடுப்பதற்கு, மிகவும் தேவையான மற்றும் சரியான நேரத்தில் முன்முயற்சியின் ஒரு பகுதியாக எங்களை அனுமதித்ததற்கும் எங்கள் பெரு நிறுவன பங்காளிகள் மற்றும் சர்வோதயாவுக்கும் நன்றி தெரிவிக்க விரும்புகிறேன்” என அவர் மேலும் தெரிவித்தார்.

> **சிட்டி இன் முகாமைத்துவப் பணிப்பாளரும் இலங்கை நாட்டுக்கான பிரதம நிறைவேற்று அதிகாரியுமான ரவின் பஸ்நாயக்க கருத்து தெரிவிக்கையில், தற்போதைய நிதி நெருக்கடியின் தாக்கம் நாடு முழுவதும் கடுமையாக உணரப்பட்டுள்ள நிலையில் போராட்டங்கள் முன்னெப்போதையும் விட அதிகமாககியுள்ள நிலையில் உணவுப் பொருட்களின் விலைகள் உயர்ந்து வரும் நிலையில், மோசமாகப் பாதிக்கப்பட்டவர்களுக்கு உணவு உதவி என்பது மிகவும் அத்தியாவசியமான ஒன்றாக காணப்படுகின்றது**

புதிய கூட்டாண்மை குறித்து தனது கருத்துகளை வெளிப்படுத்திய டயலொக் ஆசிஆட்டா பிஎல்சி இன் குழும தலைமை நிதி அதிகாரி Hong Zhou Wong, “இந்த மனிதாபிமான முயற்சியில் எங்களுடன் இணைந்ததற்கு அனைத்து பங்குதாரர்களின் சார்பாக சிட்டிக்கு நன்றிகளை தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். தற்போதைய நெருக்கடியால் பாதிக்கப்பட்டுள்ள 50,000 க்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு இன்றுவரை நாங்கள் அவசரகால நிவாரணங்களை வழங்கியுள்ளோம். நாங்கள் 200,000 குடும்பங்களுக்கு நிவாரங்களை வழங்குவதற்கான இலக்கினை கொண்டுள்ளோம். இந்த நோக்கத்தை முன்னோக்கி கொண்டு செல்வதற்கு எங்களுடன் இணைந்துகொள்ளுமாறு ஒத்த எண்ணம் கொண்ட பெரு நிறுவனங்களுக்கு நாங்கள் அழைப்பு விடுக்கின்றோம். 17 மில்லியனுக்கும் அதிகமான வாடிக்கையாளர்களை கொண்ட இலங்கையின் பரந்த வலையமைப்பாக எமது மக்களின் மன அழுத்தத்தை தணிக்க உதவுவதற்கு நாம் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும். இந்தத் தேவையின் போது, இலங்கை முழுவதிலும் உள்ள குடும்பங்களுக்கு ஆதரவளிக்கும் பொறுப்பை நாங்கள் மேற்கொள்கின்றோம்.

அவசரகால நிவாரண விநியோக நடவடிக்கைகளை விரிவுபடுத்த ‘மனிதநேய ஒன்றிணைவு’ அனைத்து பெரு நிறுவனங்களை இந்த முயற்சியில் இணைந்துகொள்ளுமாறு அழைக்கின்றது” என்றார்.





பா. நிரோஸ்
ddnirosh@gmail.com

# உணவு நெருக்கடியை தணிக்கும் திட்டங்கள்

## அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவில் அவதானம்



உலக சந்தை நிலைவரங்கள், நாடு பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுத்துள்ள சூழ்நிலையில் நாட்டில் ஏற்படக்கூடிய உணவு நெருக்கடியைக் கட்டுப்படுத்துவதற்கு மேற்கொள்ளக்கூடிய குறுகிய கால மற்றும் நீண்டகால உற்பத்தித் திட்டங்கள் குறித்து, பாராளுன்ற உறுப்பினர் திஸ்ஸ விதாரண தலைமையில் நடைபெற்ற அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவில் ஆராயப்பட்டது.

இவ்வருடத்துக்குத் தேவையான அரிசி தேவையில் பெருந்தொகையானவை இந்தப்போகத்தில் அறுவடை செய்யமுடியும் என மதிப்பீடு செய்யப்பட்டிருப்பதாகவும், எஞ்சிய தொகையைப் பெற்றுக் கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை விரைவுபடுத்துமாறு வர்த்தக அமைச்சுக்கு அறிவிக்கப்பட்டிருப்பதாகவும் இங்கு தெரியவந்தது.

அத்துடன், அரிசி மற்றும் ஏனைய உணவுப் பொருட்களுக்காகப் பயன்படுத்தப்படும் உரம் மற்றும் விவசாய இரசாயனப் பொருட்களை இறக்குமதி செய்வதற்குத் தேவையான நிதி உதவியை விரைவில் பெற்றுக் கொடுக்குமாறும் சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு அறிவிக்குமாறும் அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழு, விவசாய அமைச்சின் அதிகாரிகளுக்குத் தெரியப்படுத்தியது.

அத்துடன், குறிப்பிட்ட சூழ்நிலையில் அரிசியின் நுகர்வு அதிகரிக்கலாம் என்பதால், குறுகிய காலத்தில் அறுவடை செய்யக்கூடிய மாற்றுப் பயிர்கள், அரிசிக்கான மாற்றுப் பயிர்களின் சாத்தியக் கூறுகள் குறித்தும் குழு கேள்வியெழுப்பியது. துரித உணவு உற்பத்தி நிகழ்ச்சித் திட்டங்களில் ஒன்றாக ‘ஒன்றிணைந்து பயிர்செய்வோம் - நாட்டை வெல்வோம்’ என்ற திட்டத்தை நாடு முழுவதும் நடைமுறைப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளதாகவும், இது இம்மாதம் 15ஆம் திகதி முதல் அமல்படுத்தப்பட இருப்பதாகவும் இங்கு தெரிவிக்கப்பட்டது. இந்தத் திட்டம் ஒழுங்கான முறையில் நடைமுறைப்படுத்தப்படுகிறதா என்பதைக் கண்காணிக்குமாறும் குழு, அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்தது.

### மின்சார சபையை நடத்த

# தொழிற்சங்கங்கள் தடை



இலங்கை மின்சார சபையை நட்டமில்லாமல் இயங்கச் செய்வதற்கு பல்வேறு திட்டமிடல்கள் மேற்கொள்ளப்பட்டாலும் இலங்கை மின்சார சபையின் தொழிற்சங்கங்கள் இதற்குத் தடையை ஏற்படுத்தி வருவதாக அமைச்சர் காஞ்சன விஜேசேகர சபையில் குற்றம் சுமத்தினார்.

பாராளுமன்றத்தின் நேற்றைய (09) அமர்வில் எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் மயந்த திஸாநாயக்கவின் வினாவுக்கு பதிலளித்து உரையாற்றும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

எரிபொருளுக்கான தட்டுப்பாடு, மின்வெட்டுகளால் மக்கள் பாரிய பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருகின்றனர். ஜூன் மாதம் நாட்டுக்கு தேவையான எரிபொருளை பெற்றுக்கொள்வதற்கு 550 மில்லியன் டொலர் தேவைப்படுகிறது. இந்த நிதி கைவசம் இல்லை என்பதால் இந்த நிதியை எவ்வாறு செலுத்துவது என்பது தொடர்பில் மத்திய வங்கி, மக்கள் வங்கி ஆகியவற்றுடன் கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இதன்படி, இலங்கைக்கு எரிபொருளை வழங்குவதற்கு 90 விநியோகஸ்தர்கள் முன்வந்துள்ளனர். எவ்வாறாயினும் எரிபொருளை பெற்றுக் கொள்வது என்றால், அரசாங்கம் முன்வைக்கும் நிபந்தனைகளை ஏற்றுக் கொள்ளும் ஒரு விநியோகஸ்தரிடம் நீண்ட கால அடிப்படையில் எரிபொருளை கொள்வனவு செய்ய எதிர்பார்த்துள்ளோம் எனவும் கூறினார்.

மின் துண்டிப்பு இல்லாமல் தொடர்ந்து மின்சாரத்தை விநியோகிக்க வேண்டுமாக இருந்தால் அதற்கு எரிபொருள் அவசியம். குறிப்பாக, மாதமொன்றுக்கு தொடர்ந்து மின்சாரத்தை விநியோகிப்பதற்கு மாத்திரம் 100 மில்லியன் டொலர் தேவைப்படுகிறது. புதுப்பிக்கத்தக்க சக்தி சட்டமூலம் நிறைவேற்றப்பட்டால் இந்த நூறு மில்லியன் டொலரும் நாட்டைவிட்டு வெளியில் செல்வது தடுக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

# எரிபொருளை வழங்குவதற்கு ரஷ்யா தயாரில்லை

இந்திய கடன் உதவித் திட்டத்தின் கீழ் எரிபொருள் எவ்வாறு பெற்றுக் கொள்ளப்படுகிறதோ அதேபோல் 35 சதவீத விலைக்கழிவில் எரிபொருளை வழங்க ரஷ்யா தயாராக உள்ளதாகவும் ஏன் அந்த எரிபொருளை பெற்றுக்கொள்ள அரசாங்கம் முன்வரவில்லை என முன்னாள் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார கேள்வி எழுப்பினார். இதற்கு பதிலளித்த அமைச்சர் காஞ்சன விஜேசேகர, 35 சதவீத விலை கழிவுடன் எரிபொருளை வழங்குவதற்கு ரஷ்யா இணங்குமாக இருந்தால் அதனை வாசுதேவ நாணயக்கார தலையிட்டு பெற்றுத் தரவேண்டும்.

இலங்கைக்கான ரஷ்ய தூதுவரை தனிப்பட்ட ரீதியில் சந்தித்து கலந்துரையாடினேன். இதன்போது எரிபொருளை விநியோகிக்க கூடிய நான்கு நிறுவனங்களின் பெயர் பட்டியலை எனக்கு வழங்கினார். எனினும் நாடுகளுக்கிடையில் எரிபொருளை ரஷ்யா வழங்குவதில்லை எனவும் இதன்போது தூதுவர் என்னிடம் கூறியிருந்தார்.

# அரிசியை பதுக்கி விட்டனர்



கடந்த ஞாயிற்றுக்கிழமை (05) கடைகளில் 260 ரூபாய்க்கு விற்பனையான அரிசி, இந்தவாரம் செவ்வாய்க்கிழமை முதல் காணாமல் போய்விட்டதாக சபையில் தெரிவித்த முன்னாள் அமைச்சர் ஜோன் செனவிரட்ன, இவ்வாறு பதுக்கி வைக்கப்பட்டுள்ள அரிசியை கண்டுபிடிக்க அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று (9) விவசாய அமைச்சரிடம் விசேட கோரிக்கையை விடுத்தே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

தற்போது மக்கள் அரிசி தட்டுப்பாட்டுக்கு பாரியளவில் முகம்கொடுத்துள்ளனர்.

ஞாயிற்றுக்கிழமை 260 ரூபாய்க்கு மக்கள் அரிசியை கொள்வனவு செய்தனர். பின்னர், செவ்வாய்க்கிழமை அளவில் கடைகளில் அரிசியை காணவில்லை. அதனை அவர்கள் பதுக்கியிருக்கலாம்.

தற்போது எங்கேயும் அரிசி இல்லை. இது தொடர்பாக நுகர்வோர் அதிகார சபையின் அதிகாரிகளை ஈடுபடுத்தியாவது பதுக்கிய அரிசியை வெளியே கொண்டு வாருங்கள். இப்போது மக்கள் அரிசி இன்றி பெரும் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளனர் என்றார்.

### “சபாநாயகருடன் இருபதையிட்டு

# வெட்கமடைகிறேன்”



நாட்டில் இன்று ஏற்பட்டுள்ள அனைத்து அரசியல் பிரச்சினைகளுக்கும் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவின் திருட்டுத்தனமான செயற்பாடுகளே காரணம். அவ்வாறான, ஒருவர் இருக்கும் இப் பாராளுமன்றத்தில் நானும் எம்.பியாக இருபதையிட்டு வெட்கமடைகின்றேன் என எதிர்க்கட்சிகளின் பிரதம கொறடாவும் ஐக்கிய மக்கள் சக்தி எம்.பியுமான லக்ஷ்மன் கிரியெல்ல சபையில் தெரிவித்தார்.

அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவின் தலைவர் தெரிவு தொடர்பில் பாராளுமன்றத்தில் நேற்று (9) கருத்தை முன்வைக்கும்போதே எதிர்க்கட்சிகளின் பிரதம கொறடாவும் ஐக்கிய மக்கள் சக்தி எம்.பியுமான லக்ஷ்மன் கிரியெல்ல இவ்வாறு தெரிவித்தார்.

பாராளுமன்றத்தின் அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவின் தலைவராக எதிர்கட்சி உறுப்பினர் இருக்கவேண்டும் என்ற அடிப்படையில், ஐக்கிய மக்கள் சக்தியின் எம்.பி.யான ஹர்ச டி சில்வாவின் பெயர் ஏற்கெனவே பரிந்துரைக்கப்பட்டது. எனினும் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன, அரசியல் ரீதியாக செயற்பட்டு இந்தத் தலைவர் பதவிக்கு அரச தரப்பின் எம்.பி.யான அநுர பிரியதர்சன யாப்பாவை நியமித்துள்ளதாக லக்ஷ்மன் கிரியெல்ல எம்.பி குற்றம்சாட்டினார்.

### இளைஞர்களின் வீட்டுக் கனவை கலைத்துவிட்டு

## நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு

# புதிய வீடு எதற்கு?



மாதாந்தம் 50 ஆயிரம் சம்பளம் பெறும் பட்டதாரி இளைஞர்களின் வீடு கட்டும் கனவை கலைத்துவிட்டு, நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு புதிய வீடு எதற்கு என தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் சபையில் கேள்வி எழுப்பினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று (9) இடம்பெற்ற கேள்வி நேரத்தின் போதே, அவர் இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார். இதன்போது அங்கு தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர், “வடக்கு கிழக்கினை பொறுத்தவரையில் 30 வருட யுத்தம் காரணமாக வீடுகளை இழந்து, வீடுகள் இல்லாமல் ஆக்கப்பட்டு, அழிக்கப்பட்டுள்ள ஒரு பிரதேசம். அந்த வகையிலேயே கடந்த நல்லாட்சி அரசாங்கத்தின் ஆட்சிக்காலத்தில் பாரிய வீடமைப்பு வீட்டுத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டன. எனினும் தற்போதைய அரசாங்கத்தின் ஆட்சி காலத்தில், அந்த வீடுகள் இதுவரை முடித்துக்கொடுக்கப்படாமல் உள்ளன. நல்லாட்சி அரசாங்கத்தில் ஆரம்பிக்கப்பட்ட வீடுகளை, தாம் பூர்த்தி செய்யமுடியாது என அரசாங்கத்தின் அமைச்சர்கள் தெரிவித்துள்ளனர்.

எனவே, வடக்கு கிழக்கில், நல்லாட்சி அரசாங்கத்தில் ஆரம்பிக்கப்பட்ட வீடுகளை நிர்மாணிப்பதற்குரிய நடவடிக்கைகளை அரசாங்கம் முன்னெடுக்க வேண்டும்” எனத் தெரிவித்தார்.

இதற்கு பதிலளித்த அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, “நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தை காட்டிலும் தற்போதைய அரசாங்கம், கடன் அடிப்படையில் அதிக எண்ணிக்கையிலான வீடுகளை அமைத்துக் கொடுத்துள்ளது” எனத் தெரிவித்திருந்தார்.

இதன்போது குறுக்கிட்ட சாணக்கியன், இந்த வீடுகளுக்கு ஒரு இலட்சம் ரூபாய் மாத்திரமே கடன் வழங்கப்பட்டு உள்ளதாகவும் இதனைக் கொண்டு வீடுகளை அமைக்கமுடியுமா? எனவும் கேள்வி எழுப்பினார்.

இதற்கு பதிலளித்த வீடமைப்புத்துறையின் முன்னாள் பிரதியமைச்சர், குறித்த வீடுகளுக்கு 6 லட்சம் ரூபாய் கடன் வழங்கப்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டினார். எனினும் வழங்கப்பட்ட தகவல்கள் யாவும் பொய்யானவை என தெரிவித்துள்ளார். அத்துடன், வடக்கு, கிழக்கு, மலையகத்தில் வாழ்பவர்கள் வீடமைப்பு சார்ந்த விடயங்களில் பாரிய பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்து வருகின்றனர் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# பதுக்கிய அரிசிக்கு பழைய விலை

■ பாறுக் ஷிஹான்

பதுக்கி வைக்கப்பட்டிருக்கும் அரிசி தொடர்பில் கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டுக்கு அமைவாக, நுகர்வோர் பாதுகாப்பு அதிகாரிகள் கண்காணிப்பு விஜயம் மேற்கொண்டு, அந்த அரிசியை பழைய விலைக்கு பொதுமக்களுக்கு பெற்றுக்கொடுத்துள்ளனர்.

அம்பாறை மாவட்டம் கல்முனை மாநகர சபைக்கு உட்பட்ட மருதமுனை பகுதியில் அரிசி பதுக்கல் இடம்பெறுவதாக வியாழக்கிழமை (9) நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபைக்கு முறைப்பாடு கிடைக்கப்பெற்றிருந்தது.

அரிசி பதுக்கல் இடம்பெற்றதாக அடையாளம் காணப்பட்ட கடைக்குச் சென்ற நுகர்வோர் அதிகார சபை அதிகாரிகள், அரிசியை பழைய விலைக்கு பொதுமக்களுக்கு விற்பனை செய்வதை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுத்தனர்.



மருதமுனை பகுதியில் குறித்த கடைக்கு, "பொதுமக்களே உடனே விரையுங்கள். குறைந்த விலையில் அரியைப் பெறுங்கள்; நுகர்வோர் பாதுகாப்பு அதிகாரிகளும் அங்குள்ளனர்" என, அப்பகுதியிலுள்ள அந்நூர் பள்ளிவாசலின் ஒலிபெருக்கியில் அறிவிக்கப்பட்டது.

இதனையடுத்து சம்பவ இடத்துக்கு திரண்டு வந்த மக்கள், பழைய விலைக்கு அரிசியை கொள்வனவு செய்துகொண்டு சென்றனர்.

# "உண்மை இல்லை"



■ என். ராஜ்

வங்கிகளில் மக்களால் வைப்பு செய்யப்பட்டுள்ள பணத்தை, அரசாங்கம் தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுப்பதற்காக, எடுத்து விடுமென தெரிவிக்கப்படுவதில் உண்மையில்லை என, இலங்கை வங்கியின் வடபிராந்திய உதவி பொது முகாமையாளர் வ.சிவானந்தன் தெரிவித்தார்.

வங்கி கட்டமைப்பு என்பது பொருளாதார கட்டமைப்பில் இன்றியமையாத ஒன்றாகும். வங்கி கட்டமைப்பு இல்லாவிட்டால் நாட்டினுடைய பொருளாதாரத்தைச் சமன் செய்ய முடியாது.

வங்கிகளில் உள்ள காசுகளை அரசாங்கம் எடுத்துவிடக் கூடுமென, மக்கள் தாங்களாகவே நினைக்கின்றார்கள். அது தொடர்பில், நாளுக்கு நாள் வாடிக்கையாளர்கள் எம்மிடம் கேட்ட வண்ணம் இருக்கின்றார்கள்.

உண்மையாகவே அது பொய்யான விடயமாகும். நாங்கள் அரசாங்க வங்கி. உங்களுடைய பணத்திற்கான பாதுகாப்பு நூற்றுக்கு 200 சதவீதம் இருக்கும். வங்கி கட்டமைப்புடன் தொடர்ந்து பயணிக்க வேண்டும். இல்லாவிட்டால் இந்த நாட்டுக்கு பொருளாதார ரீதியில் விடிவு இல்லை என்று இலங்கை வங்கியின் வடபிராந்திய உதவி பொது முகாமையாளர் வ.சிவானந்தன் தெரிவித்தார்.

### மாற்றுத்திறனாளியின்

# ஓட்டோ மீட்பு



■ எம்.றொசாந்த், நிதர்சன் வினோத்

யாழில் மாற்றுத்திறனாளி ஒருவரின் ஓட்டோவைத் திருடிய குற்றச்சாட்டின் கீழ், துன்னாலை பகுதியை சேர்ந்த இளைஞன் கைது செய்யப்பட்டுள்ளதுடன், திருடப்பட்ட ஓட்டோவும் மீட்கப்பட்டுள்ளது.

யாழ். போதனா வைத்தியசாலை, பின் வீதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மாற்று திறனாளியின் ஓட்டோ, மே மாதம் திருடப்பட்டது.

குறித்த இளைஞன், திருடப்பட்ட ஓட்டோவின் இலக்கத் தகட்டை மாற்றி பாவித்து வந்தமையை கண்டறியப்பட்டுள்ளது.

# குழு மோதலில் இளைஞன் பலி




■ செ.கீதாஞ்சன்

முல்லைத்தீவு, மல்லாவி, 4 ஆம் யூனிட் திருநகர் பகுதியில் நேற்றிரவு, இளைஞர் குழுக்களுக்கு இடையில் இடம்பெற்ற மோதலில் ஒருவர் உயிரிழந்ததுடன், 6 பேர் காயமடைந்துள்ளனர்.

சம்பவத்தில் காயமடைந்தவர்கள் மல்லாவி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி, வவுனியா மாவட்ட மருத்துவமனைகளுக்கும் இருவர் வவுனியா மாவட்ட மருத்துவமனைக்கும் அனுப்பி வைக்கப்பட்டனர். அதிலொருவரே உயிரிழந்துள்ளார் எனத் தெரிவித்த மல்லாவி பொலிஸார், விசாரணைகளை முன்னெடுத்துள்ளதாக அறிவித்தனர்.

### ரூ.44 இலட்சம் மோசடி:

# முகாமையாளருக்கு விளக்கமறியல்



■ கனகராசா சரவணன்

மட்டக்களப்பு, ஓட்டுமாவடியிலுள்ள, தனியார் நிறுவனமொன்றில் 44 இலட்சம் ரூபாயை மோசடி செய்த குற்றச்சாட்டின் கீழ், மாவட்ட விசேட குற்றப் புலனாய்வு பிரிவினரால் கைது செய்யப்பட்ட அதன் முகாமையாளரை, எதிர்வரும் 13 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற நீதவான் உத்தரவிட்டார்.

குறித்த நிறுவனத்தில் கடமையாற்றி வந்த முகாமையாளர், அந்தக் கம்பனியின் 44 இலட்சத்து 67 ஆயிரத்து 353 ரூபாயை மோசடி செய்துள்ளதாக அந்தக் கம்பனி உரிமையாளர், முகாமையாளருக்கு எதிராக, மாவட்ட விசேட குற்றப் புலனாய்வு பிரிவுக்கு முறைப்பாடு செய்தார்.

இதையடுத்து, குறித்த நபரை செவ்வாய்க்கிழமை (07) கைது செய்து, மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டபோது, இவரை எதிர்வரும் 13ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது.

# டிப்ளோமா சான்றிதழ் வழங்கும் நிகழ்வு

■ பைஷல் இஸ்மாயில்



தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில் 2017/18 ஆம் ஆண்டுக்கான இதழியல் டிப்ளோமா பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்த மாணவர்களுக்கான டிப்ளோமா சான்றிதழ் வழங்கி வைக்கும் நிகழ்வு, ஞாயிற்றுக்கிழமை (12) பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழா கேட்போர் கூடத்தில் காலை 10 மணிக்கு இடம்பெறவுள்ளதாக பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் பேராசிரியர் ரமீஸ் அபூபக்கர் தெரிவித்தார்.

2018 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட குறித்த பயிற்சி நெறியானது, ஈஸ்டர் குண்டுத்தாக்குதல் மற்றும் கொரோனா நோய்த் தொற்று காரணமாக சில வருடங்கள் காலதாமதமானதுடன், இதற்கான இறுதிப் பரீட்சை கடந்த வருடம் இடம்பெற்றிருந்தது.

இதில் 41 மாணவர்கள் சித்தியடைந்துள்ளதுடன், அந்த மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கி வைக்கும் நிகழ்வே இடம்பெறவுள்ளது.



# ஆசிரியர்கள் ஆர்ப்பாட்டம்

■ தீஷான் அஹமட்

தூரப் பகுதிகளிலிருந்து வருகைதந்து, மூதூர் வலயக் கல்வி அலுவலகப் பிரிவிலுள்ள பாடசாலைகளில் கடமையாற்றும் ஆசிரியர்கள், மூதூர் வலயக் கல்வி அலுவலகத்துக்கு முன்பாக, நேற்று (09) காலை கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். தற்போதைய வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு, எரிபொருள் விலையின் அதிகரிப்பு, பிராயாணத்தின்போது ஏற்படும் அசௌகரியம் உள்ளிட்ட பல காரணங்களை முன்வைத்து முன்னெடுக்கப்பட்டது.

இந்தக் கவனயீர்ப்பில் ஈடுபட்டோர், தமது பிரதேசங்களிலுள்ள பாடசாலைகளுக்கான இடமாற்றத்தையோ அல்லது தற்காலிக இணைப்பையோ பெற்று தருமாறு வலியுறுத்தியிருந்தனர். அதன்பின்னர், மூதூர் வலயக் கல்வி அலுவலகத்துக்குப் பேரணியாகச் சென்று வலயக்கல்விப் பணிப்பாளர் முனவ்வறா நளீமிடம் தமது கோரிக்கை அடங்கிய மகஜரை கையளித்தனர்.



# காத்திருந்தோர் கடுப்பாகினர்

■ நிதர்சன் வினோத்

சாவகச்சேரி எரிவாயு விற்பனை நிலையத்தில் எரிவாயுவைப் பெற்றுக் கொள்வதற்காக பெருந்திரளான மக்கள் நேற்று (09) காலை முதல் காத்திருந்தனர்.

எனினும், நீண்ட நேரமாகியும் எரிவாயு கிடைக்கப்பெறாத நிலையில், நிர்வாகத்தினருக்கும் பொது மக்களுக்கும் இடையில் வாய்த்தர்க்கம் ஏற்பட்டிருந்தது.

### மட்டு.மாவட்டத்தில் சேதனப் பசளையைப் பயன்படுத்தி

# 80 ஆயிரம் ஏக்கரில் சிறுபோக நெற்செய்கை

■ ரீ.எல்.ஜவ்பர்கான்



மட்டக்களப்பு மாவட்டத்தில் சேதன பசளை மூலம் சுமார் 80 ஆயிரம் ஏக்கரில் சிறுபோக வேளாண்மை செய்கை பண்ணப்பட்டு இருப்பதாக அகில இலங்கை விவசாய சம்மேளத்தின் மட்டக்களப்பு மாவட்ட தலைவர் கே.யோகவேள் தெரிவித்தார்.

சேதனப் பசளையை நம்பி செய்கை பண்ணப்பட்டுள்ள சிறுபோக வேளாண்மை நல்ல விளைச்சலைத் தந்துள்ளதாகவும் இரசாய உரம் கிடைக்கும் பட்சத்தில் மேலும் நல்ல அறுவடையை எதிர்பார்க்க முடியுமெனவும் அவர் தெரிவித்தார்.

அகில இலங்கை விவாசாய சம்மேளம், விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீரவுடன் அண்மையில் நடத்திய பேச்சு வார்த்தையின்போது, இம்மாத இறுதிக்குள் இந்தியாவிலிருந்து இரசாயன பசளையை இறக்குமதி செய்து தருவதாகவும் உறுதியளித்ததாக அவர் மேலும் தெரிவித்தார்.

சேதனப் பசளை மூலம் செய்கை பண்ணப்பட்ட வேளாண்மையை அறுவடை செய்யும்போது, ஓர் ஏக்கருக்கு 10 மூடை அறுவடையை எதிர்பார்த்தால் இரசாயன பசளை மூலம் செய்கை பண்ணப்படும் நெற்செய்கைக்கு ஓர் ஏக்கருக்கு 35 மூடைகளை அறுவடையாக எதிர்பார்க்க முடியும் என்றார்.

# டெங்கால் 331 பேர் பாதிப்பு; மீன்குஞ்சுகள் விநியோகம்



■ ரீ.எல்.ஜவ்பர்கான்

மட்டக்களப்பு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில், டெங்கு காய்ச்சலுக்கு உள்ளான நிலையில், கடந்த ஒரு மாத காலத்தில் இருவர் பலியாகியுள்ளனர். அத்துடன் 331பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என மட்டக்களப்பு சுகாதார வைத்தியதிகாரி டொக்டர் இ.உதயகுமார் தெரிவித்தார்.

டெங்கு நோயைக் கட்டுப்படுத்தும் நோக்கில், கிணறுகளில் மீன்குஞ்சுகளை இடும் நடவடிக்கைகளை சுகாதார பகுதியினர் மேற்கொண்டுள்ளனர்.


# லொறியை உடைத்து கொள்ளை

■ நிதர்சன் வினோத்

கோண்டாவில் களஞ்சிய வளாகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த லொறியை உடைத்து, சுமார் 11 இலட்சம் ரூபாய் பெறுமதியான இலத்திரனியல் உபகரணங்களைக் கொள்ளையடித்த இருவரில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். தலைமறைவான மற்றவருக்கு வலை வீசப்பட்டுள்ளது.

கோண்டாவிலில் உள்ள வர்த்தக நிலையத்துக்குத் தேவையான பொருட்கள் லொறியில் எடுத்துவரப்பட்டன. எனினும், டீசல் இல்லாமை காரணமாக இடைநடுவிலேயே தரித்துவிடப்பட்டிருந்தது.

அதன்போதே, அந்த லொறியை உடைத்து, பொருட்கள் கொள்ளையிடப்பட்டுள்ளன.




இதுதொடர்பில், வர்த்தகரால் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

கோண்டாவிலைச் சேர்ந்த 21, 22 வயதுடைய இருவரே இந்தக் கொள்ளை சம்பவத்தில் ஈடுபட்டுள்ளனர் என தெரியவந்துள்ளது. கைது செய்யப்பட்ட சந்தேக நபருக்கு எதிராக, 4 வழக்குகளின் கீழ், நீதிமன்ற பிடியாணை ஏற்கெனவே பிறப்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# சிறுமி துஷ்பிரயோகம்: இளைஞனுக்கு கடூழிய சிறை

மாங்குளம் பிரதேசத்தில் 10 வயது சிறுமியொருவரை பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்திய இளைஞருக்கு கடூழிய சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் முன்னிலையில் மேற்படி வழக்கு நேற்று முன்தினம் (08) தீர்ப்புக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

> **2017 மார்ச் மாதம் பாடசாலைக்கு சென்ற 10 வயதான சிறுமியை, மாங்குளத்தைச் சேர்ந்த 30 வயதான இளைஞர் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தி உள்ளதாக குற்றஞ்சாட்டி, தாக்கல் செய்யப்பட்ட வழக்கில், நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியனால் தீர்ப்பு வழங்கப்பட்டது**

குறித்த இளைஞரால் இரு தடவைகள் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு தான் உட்படுத்தப்பட்டதாக சிறுமி சாட்சியமளித்திருந்தார்.

சிறுமியின் சாட்சியத்தை ஏற்றுக்கொண்ட நீதிமன்றம், குற்றவாளியான இளைஞருக்கு 10 வருட கடூழிய சிறைத்தண்டனை விதித்து தீர்ப்பளித்துள்ளது.

பாதிக்கப்பட்ட சிறுமிக்கு 4 இலட்சம் ரூபாய் நஷ்டஈடு செலுத்த வேண்டுமென உத்தரவிட்ட நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன், அதனை செலுத்த தவறும் பட்சத்தில் மேலும் 02 வருடங்கள் கடூழிய சிறைத்தண்டனை அனுபவிக்க நேரிடும் என அறிவித்துள்ளார்.

20,000 ரூபாய் அபராதத்தையும் செலுத்த வேண்டும் என குற்றவாளிக்கு உத்தரவிடப்பட்டதுடன், அதனை செலுத்த தவறும் பட்சத்தில் மேலும் 02 வருடங்கள் கடூழிய சிறைத்தண்டனை அனுபவிக்க நேரிடும் என உத்தரவிடப்பட்டுள்ளது.

மாங்குளம் பகுதியைச் சேர்ந்த 30 வயதான இளைஞர் ஒருவருக்கே இந்தத் தீர்ப்பு அறிவிக்கப்பட்டுள்ளது.

2017 மார்ச் மாதம் பாடசாலைக்கு சென்ற 10 வயதான சிறுமியை, குறித்த இளைஞர் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தியுள்ளதாக குற்றஞ்சாட்டி இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.



## பலாங்கொடையிலும்
# தமிழக நிவாரணம்

எம். குமார்

தமிழக அரசாங்கத்தால் இலங்கைக்கு வழங்கப்பட்ட நிவாரணப் பொதிகள், நேற்று (9) பலாங்கொடை பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட பெட்டிகல, மெந்தகந்த, ராஸகல, விக்கிலி ஆகிய தோட்ட மக்களுக்கு வழங்கி வைக்கப்பட்டன.

நான்கு தோட்டங்களிலும் தெரிவு செய்யப்பட்ட 1,866 குடும்பங்களுக்கு குறித்த நிவாரணப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் அப்பகுதிகளில் உள்ள கிராம உத்தியோகத்தர்கள், பலாங்கொடை பிரதேச செயலாளர், தோட்ட அதிகாரிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## கலவானையில் நிமோனியா
# 9 பேர் மரணம்
## மருந்துகளுக்கும் தட்டுபாடு

உபேந்திரா பிரியங்கர

கலவான பிரதேசத்தில் திடீரென அதிகரித்து வரும் நிமோனியா காய்ச்சலுக்கு உள்ளாவோருக்கு உரிய மருந்துகளை வழங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த நிமோனியா காய்ச்சலால் இதுவரை 35 பேர் வைத்தியசாலையில் சிகிச்சைப் பெற்று வருவதுடன், இதில் சிறுவர்களும் அடங்குகின்றனர். மேலும், இந்த நிமோனியா காய்ச்சலால் இதுவரை 9 பேர் மரணித்துள்ளனர்.

இது தொடர்பில் பிரதேசவாசிகள் மற்றும் வைத்தியசாலை குழுவினரைத் தெளிவுப்படுத்தும் விசேட



கலந்துரையாடல் ஒன்று, கலவான வைத்தியசாலையின் வைத்திய அதிகாரி சாந்தன முருகே உள்ளிட்ட வைத்திய நிபுணர்கள் தலைமையில் நேற்று முன்தினம் (08) நடைபெற்றது.

வெளியிடங்களில் இந்த நோய்க்கான மருந்துகளைப் பெற்றுக்கொள்வதாயின் ஒருவருக்கு ஓர் இலட்சத்துக்கு மேல் செலவாவதாகவும் தெரிவிக்கின்றனர்.

இருமல், சுவாசிப்பதில் சிரமம், காய்ச்சல் என்பன இந்நோயின் அறிகுறிகள் என்றும் இதனால் பாதிக்கப்படும் முதியவர்கள் குறித்து அதிக கவனம் செலுத்த வேண்டும் என்றும் இந்தக் கலந்துரையாடலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொரோனாவைப் போலவே இந்த நோய் குறித்தும் அவதானமாக இருக்க வேண்டும் என்பதுடன், அதிக சன நடமாட்டம் இருக்கும் இடங்களுக்குச் செல்வதையும் தவிர்த்துக்கொள்ளுமாறும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

எனவே இந்த நோய்க்கான மருந்துகளைப் பெறுவதற்கு பரோபகாரர்களிடமிருந்து உதவிகளை எதிர்பார்ப்பதாகவும் வைத்தியசாலை நிர்வாகத்தினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

## உப்பு வாங்க வந்தவர்
# காதணிகளைப் பறித்துச் சென்றார்

சுமணசிறி குணதிலக

தனமல்வில பொலிஸ் பிரிவுக்குட்பட்ட போதகம கிராமத்தில் வசிக்கும் பெண்ணொருவரின் கழுத்தில் கத்தியை வைத்து மிரட்டி, அவரது காதணிகளைப் பறித்துச் சென்ற சம்பவம் நேற்று முன்தினம் (8) பதிவாகியுள்ளது.

தனது வீட்டுக்கு முன்பாக மரக்கறிகள், உப்பு என்பவற்றை விற்பனை செய்து வரும் குறித்த பெண்ணிடம் நேற்று முன்தினம் மாலை 3.40 மணியளவில், மோட்டார் சைக்கிளில் வருகைத் தந்த நபர், ஐந்து கிலோ கிராம் உப்பு கேட்டுள்ளார்.

இதனையடுத்து குறித்த நபருக்காக உப்பை நிறுவை செய்துகொண்டிருந்த போது, சந்தேகநபர் பெண்ணின் கழுத்தில் கத்தியை வைத்து மிரட்டி, அப்பெண்ணின் காதணிகளைப் பறித்துச் சென்றுள்ளார்.

இவ்வாறு பறித்துச் செல்லப்பட்ட காதணிகள் 90 ஆயிரம் ரூபாய் பெறுமதியானவை என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளதுடன், சந்தேகநபரை கைது செய்வதற்கான விசாரணைகளை தனமல்வில பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.









# கும்பாபிசேஷக பெருவிழா

மலைவாஞ்ஞன்

ஹட்டன், பெரிய டன்பார் ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய கும்பாபிசேக பெருவிழா நேற்று (09) மிக சிறப்பாக நடைபெற்றது.

யாக பூஜை இடம்பெற்று அதனைத் தொடர்ந்து, காலை 9 மணிக்கு உச்சிஷ்ட கணபதி ஷோஷட உபசார பூஜை, 06ஆம் கால யாக பூஜை, மஹா பூர்ணாகுதி, தீபாராதனை, நவக்தி அர்ச்சினை, சதுர்வேத பாராயணம் உள்ளிட்ட நிகழ்வுகள் சிறப்பாக நடைபெற்றன.

## மலையகத்திலுள்ள பிரதான நீர்மின் உற்பத்தி நிலையங்களின்
# மின் உற்பத்தி செயற்பாடுகள் இடைநிறுத்தம்

ரஞ்சித் ராஜபக்ஷ



மத்திய மலைநாட்டில் அமைந்துள்ள நீர்மின் உற்பத்தி நிலையங்களின் மின்சார உற்பத்தி நடவடிக்கைகள் நேற்று (9) அதிகாலை 3 மணியிலிருந்து தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளன.

இதன்காரணமாக குறித்த நீர்மின் உற்பத்தி நிலையங்களில் இருந்து கிடைக்கப் பெறும் 300 மெகாவோட் மின்சாரம் தேசிய மின்கட்டமைப்புக்கு கிடைக்காமல் போயுள்ளது.

நேற்று அதிகாலை தொடக்கம் கெனியோன், விமலசுரேந்திர, லக்ஷபான, புதிய லக்ஷபான, சமனல, மேல்கொத்மலை ஆகிய நீர் மின் உற்பத்தி நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டுள்ளன.

இந்த நிலையில், இலங்கை மின்சார சபையின் பொறியியலாளர் தொழிற்சங்கங்கள் பல இணைந்து, நேற்று முன்னெடுக்க திட்டமிட்டிருந்த பணிபகிஷ்கரிப்பானது, ஜனாதிபதியுடன் இடம்பெற்ற தொலைபேசி கலந்துரையாடலை அடுத்து கைவிடப்பட்டது.

## பாடசாலை உபகரணங்களின் விலை அதிகரிப்பும்
# தொழிலாளர்களை பாதித்துள்ளது

பி.கேதீஸ்



மலையக பிரதேசங்களில் பாடசாலை உபகரணங்களின் விலை உயர்வால், குறைந்த வருமானம் பெறும் தோட்டத் தொழிலாளர்கள் தங்களது பிள்ளைகளுக்கு பாடசாலை உபகரணங்களை பெற்றுக்கொடுப்பதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருவதாகத் தோட்டத் தொழிலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

பாடசாலை புத்தக பைகள், பாதணிகள், பயிற்சி புத்தகங்கள் உள்ளிட்ட அனைத்து பள்ளி உபகரணங்களின் விலையும் கடந்த ஆண்டை விட, இவ்வருடம் பல மடங்கு உயர்ந்துள்ளதாக தொழிலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

பாடசாலைகளுக்கு பாடசாலை உபகரணங்களை விநியோகிப்பதற்கு போக்குவரத்திற்கு அதிக பணம் செலவழிக்க வேண்டியுள்ளது. அதேபோல உபகரணங்களின் விலையும் அதிகரிக்கப்பட்டுள்ளன என விநியோகஸ்தர்கள் தெரிவிக்கின்றனர்.

தற்போது பாடசாலை பாதணி 1,200 ரூபாயில் இருந்து 3,500 ரூபாய் வரையும், புத்தகப் பைகள் 1,000 ரூபாயில் இருந்து 3,000 ரூபாய் வரையும் அதிகரித்துள்ளன.

இந்த நிலையில், குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு பாடசாலை உபகரணங்களை பெற்றுக் கொள்வதில் அரசாங்கம் ஓரளவு நிவாரணம் வழங்குமாறு பெற்றோர்கள் மேலும் கோரிக்கை விடுக்கின்றனர்.

# சமாதான நீதவான்

எம். செல்வராஜா



பதுளை, சார்ணியா மாத்தன்னை தோட்டத்தைச் சேர்ந்த பொன்னுசாமி புவனேஸ்வரி, பதுளை நீதி வலயத்துக்கு உட்பட்ட பிரிவுக்கான சமாதான நீதவானாக நேற்று (9) நியமிக்கப்பட்டுள்ளார்.

பதுளை மாவட்ட நீதிபதி ஆர். எம். எஸ். நயந்த சமரதுங்க முன்னிலையில், சமாதான நீதவானாக சத்தியபிரமாணம் செய்து கொண்டுள்ளார்.

பண்டாரவளை தமிழ் மத்திய கல்லூரியின் பழைய மாணவியான இவர், சமூக சேவைகளில் அதிக ஈடுபாடுகளுடன் செயற்பட்டு வருபவராவார்.

## மண்ணெண்ணெய் கோரி
# மஸ்கெலியாவில் வீதியை மறித்த மக்கள்



எஸ்.கணேசன்

மண்ணெண்ணெய் வழங்குமாறு கோரி மஸ்கெலியா எரிபொருள் நிலையத்துக்கு முன்பாக மஸ்கெலியா பிரதேச மக்கள் பிரதான வீதியை மறித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுப்பட்டுள்ளனர்.

இந்த எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு கடந்த மூன்று கிழமையாக மண்ணெண்ணெய் கிடைக்கவில்லை என தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் நேற்று (9) மண்ணெண்ணெய் கிடைக்கும் என மக்கள் எதிர்பார்ப்புடன் வருகைதந்த நிலையில், “இன்றைய தினமும் மண்ணெண்ணெய் வரவில்லை” என எரிபொருள் நிலைய ஊழியர்களால் தெரிவிக்கப்பட்டதையடுத்து, ஆவேசமடைந்த மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுப்பட்டனர்.

மண்ணெண்ணெய் விநியோகம் செய்வதற்கு முறையான முறைமை ஏற்படுத்தக் கோரி, வரிசையில் நின்ற சுமார் 500ற்கும் மேற்பட்ட நுகர்வோர் வீதியை மறித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆர்ப்பாட்டம் காரணமாக மஸ்கெலியா - ஹட்டன், மஸ்கெலியா - நல்லதண்ணி போன்ற பிரதான வீதியினூடான போக்குவரத்து பல மணி நேரம் ஸ்தம்பிதமாகியிருந்தது. இதனால் பயணிகள் பெரும் சிரமத்திற்கு உள்ளாகியிருந்தனர்.

இதனையடுத்து, இன்று(10) அல்லது எதிர்வரும் நாள்களில் அணைவருக்கும் மண்ணெண்ணெய் கிடைக்க தாங்கள் ஏற்பாடுகளை செய்து தருவதாக எரிபொருள் நிலைய அதிகாரியால் தெரிவிக்கப்பட்டதையடுத்து, ஆர்ப்பாட்டம் தற்காலிகமாக கைவிடப்பட்டது.

## நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஓட்டோவிலிருந்து
# எரிபொருளைத் திருடிய இருவர் கைது

ராமு தனராஜா

பசறை, மீதும்பிட பகுதியில் உள்ள வீடொன்றுக்கு முன்பாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஓட்டோவிலிருந்து டீசல், டயர் என்பன திருடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் பசறை பொலிஸில் செய்யப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைய, அதே பகுதியைச் சேர்ந்த 19, 20 வயதான இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் இருவரையும் விசாரணைக்கு உட்படுத்திய பசறை பொலிஸார், திருடி விற்பனை செய்யப்பட்டிருந்த டயர்களை கைப்பற்றியுள்ளனர்.

அத்துடன் இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் இரண்டு சந்தேகநபர்களை தேடி வருவதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளதுடன், சந்தேக நபர்கள் பசறை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட உள்ளனர்.

## டொரிங்டன் தோட்டத்தில் கற்பாறைகள் சரிவால்
# 20 குடும்பங்கள் பாதிப்பு

துவாரகஷான்

அக்கரப்பத்தனை, டொரிங்டன் தோட்டத்தில் மோர்கன் பிரிவில் மக்கள் வாழும் குடியிருப்புக்கு பின்புறத்தில் உள்ள மலையிலிருந்து பாரிய கற்பாறைகள் நேற்று முன்தினம் (8) காலை 8 மணியளவில் சரிந்து விழுந்ததால் அப்பகுதியில் வாழும் 20 குடும்பங்களைச் சார்ந்த 70க்கும் மேற்பட்டவர்கள் தொடர்ந்து அச்சத்தில் உள்ளனர்.

இத்தோட்டம் அமைந்திருக்கும் பகுதியில் பாரிய அளவிலான கற்பாறைகள் காணப்படுகின்றன.

இதனால் மழைக் காலங்களில் அடிக்கடி கற்பாறைகள் சரிந்து விழகூடிய ஆபத்தான நிலைமையை காணக்கூடியதாக இருக்கும்.

மூன்று வருடங்களுக்கு முன்பு, அதே பகுதியில் பாரிய கற்பாறைகள் சரிந்து



விழுந்ததால், அங்கு வாழ்ந்த 50க்கு மேற்பட்டவர்கள் தோட்டத்திலுள்ள பொது மண்டபமொன்றில் தங்க வைக்கப்பட்டனர்.

அதன்பின் இம் மக்களின் பாதுகாப்பு கருதி, இந்திய வீடமைப்பு திட்டத்தின் ஊடாக 46 தனி வீடுகள் கட்டப்பட்டு அதில் குடியமர்த்தப்பட்டனர்.

இன்னும் எஞ்சிய குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் பாதிப்பான குடியிருப்பு பகுதியில் தொடர்ந்து வாழ்ந்து வருகின்றனர்.

அத்தோடு இரவு நேரங்களில் சிறு பிள்ளைகளை வைத்துக்கொண்டு மழைக் காலங்களில் உயிர் அச்சத்துடன் வாழ்வதாக இவர்கள் குறிப்பிடுகின்றனர்.

சரிந்து விழுந்த கற்களும் ஆங்காங்கே ஆபத்தான நிலையில் தங்கி நிற்பதை காணமுடிகிறது.

பாதிக்கப்பட்ட மக்கள் கருத்து தெரிவிக்கையில் ஒவ்வொரு நாளும் இரவு பொழுதை மிகவும் அச்சத்துடன் கழிப்பதாகவும் அதிகாரிகள் எவரும் எங்களுடைய பிரச்சினைகளை கவனிப்பதில்லை எனவும் தெரிவித்தனர்.

கற்பாறைகள் தொடர்ந்து சரிந்து விழுவதால், உயிர் ஆபத்துகள் ஏற்பட கூடும்; உரிய அதிகாரிகள் தமக்கு உடனடியாக பாதுகாப்பை வழங்குவதோடு புதிய வீடுகளை அமைத்து தர கோரிக்கை விடுத்தனர்.

# எதற்கும் அவசரப்படாமல் இருப்பதே மேலானது

அறிவித்ததைப் போல, இலங்கை மின்சார பொறியியலாளர் சங்கம், வேலை நிறுத்தத்தில் குதித்து, அதுவே சில மணிநேரங்களுக்கு நீடித்திருக்குமாயின், பல்வேறான பிரச்சினைகள் ஏற்பட்டிருக்கும். மின்விநியோகம் அத்தியாவசிய சேவையாக அறிவிக்கப்பட்டமையால் பலரும் காப்பாற்றப்பட்டுள்ளனர்.

மின்சாரத்தடையால் பல்வேறான அசௌகரியங்களுக்கு மக்கள் இன்னமும் முகங்கொடுத்துக் கொண்டிருக்கின்றனர். காலை, பகல், இரவு என்ற வேறுபாடுகளின்றி, மின்வெட்டு அமல்படுத்தப்படுகின்றது.

1996 ஆம் முன்னெடுக்கப்பட்ட மின்வெட்டு பலருக்கும் ஞாபகத்தில் இருக்காது. தொழிற்சங்கங்களின் போராட்டத்தால், தொடர்ச்சியாக 72 மணிநேரம் மின்வெட்டு அமலில் இருந்தது. இதனால், பல்வேறான அசௌகரியங்களுக்கு மக்கள் முகங்கொடுத்தனர். அவ்வாறான நிலைமை, இப்போது ஏற்பட்டிருக்குமாயின், பல வைத்தியசாலைகள் முழுமையாக செயலிழந்து, பலரது உயிர்களும் ஊசலாடியிருக்கும்.

மருந்து தட்டுப்பாடுக்கு நாட்டில் பஞ்சமே இல்லை. வயோதிபர்களுக்குத் தேவையான மிகமுக்கியமான மருந்துகளுக்கு இன்னும் தட்டுப்பாடுகள் நிலவுகின்றன. விலைகளும் அதிகரிக்கப்பட்டுள்ளன. அவசரத் தேவைக்களுக்காக சாதாரண வலிநிவாரணி குளிசைகளைக் கூட கொள்வனவு செய்துகொள்ள முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

ஆகையால், வருமுன் காத்துக்கொள்ளும் வகையில், கவனமாகவே இருக்கவேண்டும். இலங்கையில் உள்ள குடும்பங்களில் 80 சதவீதத்துக்கும் அதிகமானோர் குறைந்த அல்லது மலிவான உணவை உண்கின்றனர் என ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது. உலக உணவுத் திட்டம் மாதாந்த அறிக்கையில் மேற்கண்ட விவரம் வெளியாகியுள்ளது. இது ஊட்டச்சத்து குறைபாட்டின் அபாயத்தை உயர்த்தி உள்ளதாகவும் கூறியுள்ளது. நோயெதிர்ப்பு சக்தியையும் குறைத்துவிடும்.

அண்டைய நாடான இந்தியாவில், கொரோனா தொற்றாளர்கள் தொடர்ந்து இனங்காணப்படுகின்றனர். அதிலிருந்து முற்றாக மீட்சி பெறவேண்டுமாயின், தடுப்பூசி கட்டாயமாகும். ஆனாலும், முகக்கவசத்தை அணிந்திருத்தல், கொரோனாவை மட்டுமன்றி, சுவாசப் பிரச்சினைகளையும் தடுக்கும்.

இந்நிலையில், உட்புற மற்றும் வெளிப்புற நடவடிக்கைகளுக்கு முகக்கவசம் அணிவது இனி கட்டாயமில்லை. கொரோனாவின் வேகம், பரவுதல் இலங்கையில் முழுமையாக கட்டுப்படுத்தப்பட்டு உள்ளதால் இவ்வாறானதொரு தீர்மானம் எட்டப்பட்டுள்ளது என சுகாதார சேவை பணிப்பாளர் நாயகம் அறிவித்துள்ளார்.

முகக்கவசம் அணிந்திருப்பதால், கொரோனா மட்டுமன்றி, பொது இடங்களில், பொதுப் போக்குவரத்தின் போது யன்னல்களின் ஊடாக, எச்சில், வெற்றிலையை குதப்பி துப்புதல் குறைந்துள்ளன. உரக்க பேசுதலும் குறைந்துள்ளது. அவற்றையெல்லாம் கவனத்தில் கொண்டு, சாதாரணமாகவே முகக்கவசத்தை அணிந்து செல்வதற்கு பணித்திருந்திருக்க வேண்டும்.

நாட்டில் ஏற்பட்டிருக்கும் மருந்து தட்டுப்பாட்டை கவனத்தில் கொண்டேனும், தீர்மானத்தை பரிசீலித்து இருக்கலாம். கொரோனா தொற்று மீண்டும் தலைத்தூக்கிவிட்டால், முதலில் இருந்தே ஆரம்பிக்க வேண்டிய நிலைமை ஏற்படும். இது செலவுகளை பன்மடங்காக்கிவிடும்.

முகக்கவசம் கட்டாயமில்லை என்பதை ஓர் அறிவிப்பாக கணக்கிலெடுத்துக்கொண்டு சொந்த பாதுகாப்புக்காக முகக்கவசங்கள் அணிந்திருத்தல் பல்வேறான தாக்கங்களில் இருந்தும் தடுக்குமென நினைவூட்டுகின்றோம்.


தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk



தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk







## வாழ்வியல் தரிசனம்

முதலாளிகள், தங்களிடம் வேலை செய்பவர்களிடம், “இந்த வேலைகள் எல்லாமே இலகுவானது; நான் என்றபடியால் சம்பளத்தை அள்ளித்தருகிறேன்” என்பார்கள்.

தாங்கள் சொல்வது மகாபொய் என்பது அவர்களுக்கே தெரியும். தற்போதைய கஷ்டமான காலத்தில், சகல தனியார் நிறுவனங்களும் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம்கொடுத்து வருவது உண்மைதான்.

எனினும், பல நிறுவனங்கள் தங்களை நம்பிய ஊழியரைக் கைவிடவில்லை. ஆனால், எல்லா நிறுவனங்களும் இணைந்து, தொழிலாளர்களின் நிலைமையில் முன்னேற்றத்தைக் கொண்டுவர, பாரிய திட்டங்களை உருவாக்க வேண்டும்.

இன்று அத்தியாவசியப் பொருட்களை வியாபாரம் செய்யும் கடைகளைச் சுற்றி, மக்கள் கூட்டம் பெருமளவில் காணப்படுகின்றது. இந்த நிலையில் சில கடைகளின் உரிமையாளர்கள், பொருட்களின் விலைகளை அதிகரிப்பது, கலப்படம் போன்ற துர்செயல்களில் ஈடுபடுவது வேதனைக்குரியது.

மக்களும் முண்டியடித்துக் கொண்டு பொருட்களைச் சேகரிக்க, தினசரியும் பொருட்களை வாங்க முயற்சி செய்கின்றார்கள்.

எனவே, தேவைக்கு அதிகமாகப் பொருட்களை வாங்காமல், நாட்டின் நிலையறிந்து செயற்பட வேண்டும். மக்களின் கஷ்டம் உணர்ந்து வாழ்வதே நீதியான முறையாகும்.

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### கடவுச்சீட்டு பெறுவதற்கு கிழக்கில் பிராந்திய அலுவலகத்தை நிறுவவும்

கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த மக்களில், கடவுச்சீட்டு பெறுவோரின் நன்மை கருதி, கிழக்கில் தனியான பிராந்திய அலுவலகத்தை நிறுவுமாறு பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

தற்போது நாட்டில் நிலவும் விலைவாசி உயர்வு, போக்குவரத்து தடங்கல்கள், பொருளாதார கஷ்டங்கள் உள்ளிட்ட பல்வேறு அசௌகரிய சூழ்நிலைகள் காரணமாக, கிழக்கு மாகாணத்தில் இருந்து கொழும்பு போன்ற தூர இடங்களிலுள்ள குடிவரவு குடியகல்வு திணைக்களத்துக்குச் சென்று, தமது கடவுச்சீட்டுகளைப் பெற்றுக் கொள்வதில், பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாக பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

தற்போது, இலங்கையிலிருந்து வெளிநாட்டு வேலை வாய்ப்புகளுக்காகச் செல்வோரின் தொகை அதிகரித்துள்ளதுடன், அதற்காக கடவுச்சீட்டுகளைப் பெற்றுக் கொள்வதற்காக, நாட்டின் நாலாபுறங்களிலிருந்தும் பெருந்தொகையானவர்கள் கொழும்புக்குச் சென்று வருகின்றனர். இதனால், நேரம், பணம் ஆகியவற்றையும் விரயம் செய்ய வேண்டி, ஏற்படுவதுடன் பல்வேறு கஷ்டங்களுக்கும் முகங்கொடுக்க வேண்டியுள்ளது.

எனவே, கொழும்பு, கண்டி, குருநாகல், வவுனியா போன்ற இடங்களில் உள்ளது போன்று, கிழக்கு மாகாணத்துக்கு என, தனியான பிராந்திய அலுவலகமொன்றை தற்காலிகமாகவாவது ஆரம்பித்து, இங்குள்ள மக்கள் எதிர்கொள்ளும் அவலங்களை நிவர்த்தி செய்வதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள், உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் எனப் பொதுமக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

அ. அஸ்வர்

## நெருக்கடியிலும் நாட்டை
# படுகுழியில் தள்ளும் பௌத்த பேரினவாதம்



தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ

இலங்கையின் இன்றைய நெருக்கடியில், சிங்கள - பௌத்த பேரினவாதத்துக்கு முக்கிய பங்குண்டு. இந்நெருக்கடி உச்சத்தை அடைந்துள்ள நிலையிலும், அது, தீர்வை நோக்கிய திசைவழியில் இன்றுவரை ஏன் பயணிக்கவில்லை என்ற கேள்வியை, இலங்கையர்கள் கேட்டாக வேண்டும்.

மக்கள் உணவுக்கும் எரிபொருளுக்கும் அல்லாடுகையில், முல்லைத்தீவில் வட்டுவாகல் கடற்படைத் தளத்துக்காக மக்களின் காணிகளை அபகரிக்கும் முயற்சி, சில தினங்களுக்கு முன்னர் நடைபெற்றது. அது, மக்களின் எதிர்ப்பால் தடுக்கப்பட்டது.

பொருளாதார நெருக்கடி உச்சம் பெற்ற பின்னர், இடம்பெறும் முதலாவது நிகழ்வு இதுவல்ல. இது, இறுதி நிகழ்வும் அல்ல! இலங்கை அரசாங்கம் எதிர்கொள்கின்ற பரந்துபட்ட எதிர்ப்பை, பலமுனைகளில் திசைதிருப்ப அரசாங்கம் முனைகிறது. அதேவேளை, சுதந்திரத்துக்குப் பிந்தைய இலங்கை அரசின் அடிப்படையாக அமைந்த, சிங்கள - பௌத்த பேரினவாதம், சர்வாதிகார அகங்காரமாகத் தன்னை உருமாற்றியுள்ள நிலையில், இது எதிர்பார்க்கக் கூடியதே.

மூன்று தசாப்தகால யுத்தமும் அதன் பொருளாதாரப் பரிமாணமும் போருக்குப் பிந்தைய காலப் பகுதியில் தொடர்ந்து அதிகரித்து வந்த இராணுவச் செலவீனமும், இன்னமும் பொதுத்தளத்தில் பேசப்படாத விடயங்களாக இருக்கின்றன.

அன்றாட பொருட்களின் அபரிமிதமான விலை உயர்வாலும் தட்டுப்பாடாலும் மக்கள் அல்லலுறுகையில், எம்.பிகளின் எரியூட்டப்பட்ட வீடுகளை மீளக்கட்டுவதற்கு, அரசாங்கம் நிதி ஒதுக்குகிறது. இது இலங்கை அரசியல் பண்பாட்டின் ஒரு பரிமாணத்தை தெளிவுபடுத்துகிறது.

இன்னொருபுறம், நிறுவன மயமாக்கப்பட்டு உள்ள சிங்கள - பௌத்த பேரினவாதத்தின் கோரப்பிடியில் இருந்து, இலங்கை இன்னமும் விடுபடவில்லை. அதனிலும் மேலாக, இலங்கை வரலாற்றில் சந்தித்திராத மிகப்பாரிய நெருக்கடியால் அதை விடுவிக்க இயலவில்லை.

சுதந்திரத்துக்குப் பிந்தைய இலங்கையானது, ‘ஜனநாயகம்’ என்ற தோற்றப் பொலிவோடு இயங்கினாலும், நடைமுறையில் அவ்வாறு அமைந்து இருக்கவில்லை. ஜனநாயகத்தின் போர்வையுடன், சர்வாதிகாரத்தை நோக்கிய நகர்வுகள் மேற்கொள்ளப்பட்ட வேளைகளில், மக்கள் தங்கள் வாக்குரிமை மூலம், சர்வாதிகாரச் சகதிக்குள் இலங்கை மூழ்காமல் பார்த்துக் கொண்டனர்.

2009இன் யுத்தவெற்றி, சர்வாதிகாரத்துக்கான வாய்ப்பை இறுதியாக வழங்கியது. ஆனால், 2015ஆம் ஆண்டு, தேர்தல் மூலம் இலங்கை மென்மையான சர்வாதிகாரத்தில் (*soft authoritarianism*) இருந்து, கடும் சர்வாதிகாரத்தை (*hard authoritarianism*) நோக்கிய நகர்வுக்கு, மக்கள் முட்டுக்கட்டை போட்டார்கள். இந்த நெருக்கடி, மீண்டுமொருமுறை சர்வாதிகாரத்துக்கான வாய்ப்புகளைத் திறந்துள்ளது. இதை நியாயப்படுத்தி, மக்கள் அங்கிகாரத்தைப் பெறுவதற்கு சிங்கள-பௌத்த பேரினவாதம் துணை போகிறது.

மூன்றாமுலக நாடுகளில், இலங்கை ஒரு வித்தியாசமான முன்மாதிரி. இனத்துவ மேலாண்மையானது, பன்மைத்துவத்தைத் தவிர்ப்பதற்கு சர்வாதிகாரமாக இருக்க வேண்டிய அவசியமில்லை. இலங்கையில் நீண்டகாலமாக இருந்து வரும் சிங்கள - பௌத்த மேலாதிக்கமும் சிறுபான்மையினரின் கீழ்படிதலும் இவ்விடயத்தை நிரூபிக்கின்றன.

சிங்கள - பௌத்த தேசியவாதத்தின் சித்தாந்தமானது, மதச்சார்பின்மையையும் பன்மைத்துவத்தையும் மேற்கத்தைய கட்டுமானங்களாகக் கருதுகிறது, இவை, இத்தீவில் பௌத்தத்தின் முதன்மையான இடத்தைப் பலவீனப்படுத்துகின்றன என்று வாதிடுகின்றன. இக்கருதுகோள்கள், காலப்போக்கில் மனித உரிமைகள், அரசியல் உரிமைகள், சுயாதீனமான நீதித்துறை, கருத்துச் சுதந்திரம் போன்ற அனைத்தையும் மேற்கத்தேயக் கட்டுமானங்களாக அடையாளம் காண்பதில் வெற்றிகண்டுள்ளன.

இவ்வாறு அடையாளம் காண்பதனூடு, இத்தீவில் பன்மைத்துவ வரலாற்றைக் கட்டியெழுப்ப விரும்பாத, சுதந்திரத்துக்குப் பிந்தைய உயரடுக்குகள், அரசியல் இலாபத்துக்காக இனம், மதம் போன்றவற்றில் பிளவுகளை ஏற்படுத்தின.

இது, உள்நாட்டுப் போருக்கும் அதைத் தொடர்ந்த அரசியல் பௌத்தமானது, பௌத்தத்தையும் ஜனநாயகத்தையும் சமரசம் செய்து நாட்டை, இராணுவ மயப்படுத்தப்பட்ட சர்வாதிகாரப் பாதையில் இட்டுச் சென்றது. அதிலிருந்து இன்றுவரை, இலங்கையால் மீள இயலவில்லை.

இது குறித்துப் பேராசிரியர் ஜெயதேவ உயன்கொடவின் கூற்று கவனிக்கத்தக்கது. “சிங்கள - பௌத்தம், ஒரு வன்முறையற்ற சமூக சித்தாந்தத்தின் பரிணாம வளர்ச்சியில், குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கவில்லை. அதில், உள்ளார்ந்த சிங்கள - பௌத்த வரலாற்று பாரம்பரியம், கருத்தியல் என்பன இன அடிப்படையிலான அரசியல் வன்முறையை ஆதரிக்கிறது” என்கிறார்.

அரசியல் பௌத்தமானது, கட்டமைக்கப்பட்ட தொன்ம வரலாற்றுக் காலத்தின் அடிப்படையில் சமூகத்தை மறுசீரமைக்க முயன்றதோடு, அதன் மூலம் பௌத்தத்தின் அமைதியான கட்டளைகளைச் சீர்குலைத்து, குழிபறித்தது. மேலும், தன் செயற்பாட்டில் ஜனநாயகத்தை கீழறுத்தது.

வரலாறு முழுவதும், எல்லா மதங்களும் அரசியல் நோக்கங்களுக்காகக் கையாளப்பட்டுள்ளன, பௌத்தமும் அவ்வாறே! இலங்கையில் உள்ள பௌத்த சாமானியர்களும் மதகுருமார்களும், அரசியல் பௌத்தத்தை பரப்புவதன் மூலம், பரஸ்பர நன்மைக்காக ஒருவரையொருவர் பயன்படுத்திக் கொண்டனர்.

பிக்குகள், தமது முக்கியத்துவம், செல்வாக்கு, ஆதரவை உறுதி செய்த அதேவேளையில், அரசியல்வாதிகளுக்கு சிங்கள - பௌத்த நற்சான்றிதழ்கள், பௌத்தத்தை வன்முறையின் கருவியாக பயன்படுத்துவதன் மூலம், இனவாத அரச இலட்சியத்துக்கு விசுவாசத்தை நிரூபிக்க ஒரு தளத்தை வழங்குகிறார்கள்.

பௌத்தத்தை ஒரு தத்துவமாகக் கருதுவோருக்கு இது ஆச்சரியமளிக்கலாம். ஆனால், போதிக்கப்படுவதற்கு மாறாக, பௌத்தர்களும் பௌத்தமும் எப்போதும் வன்முறையைத் தனது பகுதியாகக் கொண்டிருந்தது. ஏனென்றால், தெற்காசியாவில் ஓர் அமைதியான அரசு இருந்ததில்லை. காலப்போக்கில், பௌத்தம் ஒரு நியாயமான போர்க் கோட்பாட்டை வகுத்ததாகத் தோன்றுகிறது. இதன் விளைவு என்னவென்றால், அரசியலானது, பௌத்த மதத்தை மாற்றியமைத்தது; பௌத்தத்துடன் தொடர்புடைய அரசியல், மதத்தின் ஒரு பகுதியாக மாறிவிட்டது.

அரசியல் பௌத்தம், பௌத்த விழுமியங்களைப் புறக்கணித்தாலும் நடைமுறையில் பௌத்தமும் அரசியல் பௌத்தமும் இணைந்து செயற்படுகின்றன. இந்த வளர்ச்சிக்கு, மூன்று முக்கிய பிரச்சினைகள் பங்களித்துள்ளன.

முதலாவது, உள்நாட்டுப் போர். இது, ‘பௌத்த பாதுகாப்பு நாடு’ என்ற இலங்கையின் அந்தஸ்தை அச்சுறுத்தியது. விடுதலைப் புலிகளைத் தோற்கடிப்பதற்கு செய்யப்படும் யாவும் நியாயப்படுத்தப்பட்டன. போர், ஒரு வன்முறை சமூகத்தை உருவாக்கியது, பல பௌத்த துறவிகள் வன்முறையை நியாயப்படுத்தினர். சில துறவிகள், இராணுவத்தில் சேர, தங்கள் ஆடைகளைக் களைந்தனர்.

யுத்தம் முடிவடைந்த பின்னர், பிரதானமாக தமிழர் பிரதேசங்களில், இராணுவ முகாம்களுக்கு அருகில், பௌத்த விகாரைகள் புதிதாக உருவாகி, மோதலுடன் தொடர்புடைய பகுதிகள், யாத்திரைத் தளங்களாக மாறியுள்ளன. இந்த யாத்திரைகள், முன்னாள் போர் வலயத்துக்கான விஜயங்களை உள்ளடக்கியது. இராணுவத்தினருக்கான பாராட்டுகளை வலுப்படுத்துவதுடன், அது அரசியல் பௌத்தத்தை, பயங்கரவாதத்தை ஒழிப்பதற்கும், தொடர்ந்து நடைபெறும் இராணுவ மயமாக்கலுக்கும் தொடர்புபடுத்துகிறது.

பிக்குகள் மத்தியில் தண்டனையின்மை, அரசியல் பௌத்தத்திற்கு பங்களித்த இரண்டாவது முக்கிய காரணமாகும். ஒரு கோவிலின் நிலை, அதன் மதகுருமார்களின் நற்பெயரைப் பொருட்படுத்தாமல், இலங்கையில் ஒரு துறவியை வெளிப்படையாக அவமரியாதை செய்ய யாரும் துணிவதில்லை, ஏனெனில், சங்க (துறவற சமூகம்) பௌத்தத்தின் மும்மூர்த்திகளில் ஒன்றாகும். (மற்ற இரண்டும் புத்தர், தர்மம் ஜபுத்தரின் போதனைகள்).

இதன் மூலம், பிக்குகள் ‘கைது செய்யப்படலாம்’ என்ற அச்சமின்றி செயற்பட அனுமதித்துள்ளது. இலங்கையில் உள்ள பல பௌத்தர்கள், தனிப்பட்ட முறையில் பிக்குகளின் மோசமான நடத்தையை விமர்சிப்பர். ஆனால், பொதுவில் அவ்வாறு செய்வதைத் தவிர்க்கின்றனர். அரச அதிகாரிகள், துறவிகளைப் பற்றி தவறாகப் பேசுவதைத் தவிர்க்கிறார்கள். எப்போதாவது அவ்வாறு பேசுபவர்கள், துரோகிகள், தேசவிரோதிகள் என்று முத்திரை குத்தப்படுகிறார்கள்.

அரசியல் பௌத்தத்துடன் இணைந்து, மதம் செயற்பட வழிவகுத்த மூன்றாவது முக்கிய காரணி, பௌத்தத்தில் ஒரு படிநிலை இல்லாமையும் அதன் விளைவாக, சங்கத்தின் நடத்தையை ஒழுங்குபடுத்தும் இயலாமையும் ஆகும். இது இன்று இலங்கையில் பௌத்தம் எதிர்நோக்கும் முதன்மையான நெருக்கடியாகும்.

பாராளுமன்றத்திலும் பிக்குகள் கைகலப்பில் ஈடுபட்டுள்ளனர். சிலர், பொது இடங்களில் கொச்சையானதும் தவறானதுமான வார்த்தைகளை பயன்படுத்துகின்றனர். மேலும், பல துறவிகள் பொருள்முதல்வாதிகளாகவும் ஊழல்வாதிகளாகவும் காணப்படுகின்றார்கள்.

இவ்வாறாக, சங்கத்தினர் இலங்கையின் தனித்துவமான பௌத்த அடையாளத்தின் பாதுகாவலர்களாக ஒருபுறம் இருப்பதில், ஒரு முரண்பாட்டை பிரதிநிதித்துவம் செய்கின்றனர்.

இத்தகைய செயல்களை ஊக்குவிக்கும் தேசியவாதம், இந்தச் சீரழிவை மறைக்கிறது. ஆனால், அரசியல் பௌத்தத்துக்கும் ஒப்பீட்டளவில் சீரழிந்த மற்றும் ஊழல் நிறைந்த சங்கத்துக்கும் இடையே உள்ள தொடர்பு, அங்கிகரிக்கப்பட்டதாகக் கருதப்படுகிறது. இந்த அங்கீகாரம் அரசின் நடத்தையில் பிரதிபலிக்கிறது.

இலங்கை, இன்னும் ஏன் தீர்வின் திசைவழியில் பயணிக்கவில்லை என்ற கேள்வியை, பௌத்தம் எதிர்நோக்கும் நெருக்கடியில் இருந்தும் நோக்க வேண்டும். அரசாங்கத்தின் அண்மைய நடத்தைகள், இதையே கோடுகாட்டுகின்றன.

# நாடு முழுதும் பொலிஸாருக்கு ஒரே சீருடை

சென்னை

‘ஒரு நாடு, ஒரே ரேஷன்’, ‘ஒரு நாடு, ஒரே ஓய்வூதியம்’ என, மத்திய அரசு பல திட்டங்களை மாநிலங்கள் அனைத்துக்கும் ஒரே மாதிரியாகச் செயற்படுத்தி வருவதுபோல், ‘ஒரு நாடு, ஒரே பொலிஸ் சீருடை’ திட்டத்தை செயற்படுத்த, மத்திய அரசு ஆலோசித்து வருகிறது.



இந்தியாவில் தற்போது பொலிஸ் துறை, மாநில அரசுகளின் அதிகாரத்துக்கு உட்பட்டதாக இருக்கிறது. மாநிலத்துக்கு மாநிலம், பொலிஸ் சீருடையும் வேறுபடுகிறது. மேற்கு வங்கத்தில் தலைநகர் கொல்கத்தாவில் மட்டும் பொலிஸார் வெள்ளை சீருடை அணிகின்றனர். மாநிலத்தின் மற்றப் பகுதிகளில் பொலிஸார் காக்கி சீருடை அணிகின்றனர். கோவாவில் பொலிஸாரின் சீருடை நீல நிற காற்சட்டையும் வெள்ளை சட்டையாக உள்ளது. புதுச்சேரியில் பொலிஸாரின் சீருடை இப்போதும் பிரான்ஸில் உள்ளது போலவே உள்ளது.

இப்படி மாநிலத்துக்கு மாநிலம், பொலிஸாரின் சீருடையில் வேறுபாடுகள் உள்ளன. நாடு முழுதும் அவர்களுக்கு ஒரே சீருடை இருக்க வேண்டும் என மத்திய அரசு விரும்புகிறது. குஜராத் மாநிலம் அஹமதாபாத்தில் உள்ள ‘நேஷனல் இன்ஸ்டிடியூட் ஒப் டிசைன்’, நாடு முழுதும் பொலிஸாருக்கு ஒரே சீருடை அளிப்பதற்காக, ஒன்பது விதமான சீருடைகளை வடிவமைத்து, மத்திய அரசுக்கு வழங்கியுள்ளது.

இந்நிலையில், மாநில தலைமை பொலிஸ் அதிகாரிக்கு தேசிய பாதுகாப்பு சபை, எழுதிய கடிதத்தில், மாநிலத்தில் பொலிஸாரின் சீருடை, தொப்பி, சின்னங்கள் உள்ளிட்ட விவரங்களைத் தெரிவிக்கும்படி கேட்டிருந்தது. ஆனால், இந்தக் கடிதத்துக்கு, பா.ஜ.க, ஆட்சி நடக்கும் மாநிலங்கள் உட்பட பல மாநிலங்கள் பதில் அனுப்பவில்லை.

இதையடுத்து, இது தொடர்பாக மற்றொரு நினைவூட்டல் கடிதத்தை தேசிய பாதுகாப்பு சபை அனுப்பியது. இதற்கு தமிழகம், மேற்கு வங்கம், மஹாராஷ்டிரா, பஞ்சாப், ஆந்திரா, உத்தர பிரதேசம், மத்திய பிரதேசம், கோவா, அசாம் உள்ளிட்ட பல மாநிலங்கள் பதில் அளிக்கவில்லை. பொலிஸை பொது பட்டியலில் கொண்டு வருவதற்கான மத்திய அரசின் நடவடிக்கையாக இது இருக்கலாம் என, மாநில அரசுகள் கருதுகின்றன.

பெண் குழந்தையின் கைகால்களைக் கட்டி

## வீட்டின் கூரையில் காயவைத்து சித்திரவதை

புதுடெல்லி

ஐந்து வயதுப் பெண் குழந்தையின் கைகால்களை கயிற்றால் கட்டி, வீட்டின் கூரையில் கொளுத்தும் வெயிலில் காய வைத்த கொடூர ச ம்பவம் புதுடெல்லியில் நடந்துள்ளது.

புதுடெல்லியின் வடகிழக்கு பகுதியான காராவால் நகரில் ஒரு வீட்டின் கூரையில், ஐந்து வயது பெண் குழந்தையின் கைகால்கள் கட்டப்பட்ட நிலையில், கொளுத்தும் வெயிலில் படுத்திருக்கும் காணொளி, புகைப்படங்கள் சமூக வலைதளங்களில் வைரலாகப் பரவியது.

தகவலறிந்த பொலிஸார் விரைந்து சென்று, குழந்தையை மீட்டனர். விசாரணையில்,



சித்திரவதைக்குள்ளான குழந்தை, முதலாம் வகுப்பு மாணவி என்பதும், வீட்டு பாடம் எழுதாததால், இப்படி கொடூர தண்டனையை கொடுத்துள்ளமை தெரியவந்தது. இது குறித்து, பல்வேறு பிரிவுகளின் கீழ் பொலிஸார் வழக்குப்பதிவு செய்தனர்.

மூன்றாவது கணவனுடன் மனைவி ஓட்டம்

## இரண்டு கணவன்மாரும் பொலிஸில் புகார்

நாக்பூர்

காதலருடன் தலைமறைவான தங்களது மனைவியைக் கண்டுபிடித்துத் தருமாறு, பெண்ணின் இரண்டு கணவர்கள் புகார் அளித்திருக்கிறார்கள். மகாராஷ்டிரா மாநிலம், நாக்பூர், பரோசா பொலிஸ் நிலையத்திலேயே இந்த விசித்திரமான முறைப்பாடு அளிக்கப்பட்டுள்ளது.

இரண்டாவது கணவரின் வீட்டை விட்டு, மூன்றாவது காதலருடன் வெளியேறிய பெண், இப்போது எங்கிருக்கிறார் எனத் தெரியவில்லை என்று இரண்டு கணவர்மாரும் முறைப்பாட்டில் கூறியுள்ளனர்.

முதல் கணவரை காதல் திருமணம் செய்த பெண்ணுக்கு, இரண்டு குழந்தைகள் இருக்கும் நிலையில், நான்கு ஆண்டுகளுக்கு பிறகு, இரண்டாவது திருமணம் செய்து கொண்டார். இரண்டாவது கணவருடன் வாழ்ந்துவந்த நிலையில், இப்போது மூன்றாவது நபருடன் சென்றுவிட்டதாகவும் சமூக வலைத்தளம் ஊடாகவே இந்த நண்பர் அறிமுகமானதாகவும் தற்போது அவருடன் வசிப்பதாகவும், அந்தப் பெண்ணின் இரண்டு கணவர்மாரும் கூறியுள்ளனர்.

மகனின் சடலத்தை வாங்க

## இலஞ்சம் கொடுக்க பிச்சை எடுத்த தம்பதி

சமஸ்டிபூர்



பீஹார் மாநிலம் சமஸ்டிபூர் மாவட்டத்தைச் சேர்ந்தவர் மகேஷ் தாக்குர் இவரது மகன் கடந்த சில நாள்களுக்கு முன்னர் காணாமல் போனார். வீடு திரும்பவில்லை. இந்நிலையில், செவ்வாய்க்கிழமை (07) அரசு மருத்துவமனையில், மகனின் சடலம் இருப்பதாகக் கிடைத்த தகவலின்படி, சடலத்தை வாங்க மகேஷ் தாக்குர், தனது மனைவியுடன் அரசு மருத்துவமனைக்குச் சென்றார்.

ஆனால், மருத்துவமனை ஊழியர்கள் சடலத்தைத் தர வேண்டுமானால் ரூபாய் 50 ஆயிரம் இலஞ்சம் கேட்டதாகக் கூறப்படுகிறது. அவ்வளது பணம் இல்லை என்பதால், தெருதெருவதாக பிச்சை எடுத்தனர்.

இது குறித்து மருத்துவமனை உயரதிகாரி கூறுகையில், விசாரணை நடத்த உத்தரவிடப்பட்டுள்ளது. இதற்கு பொறுப்பானவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

## பறக்கும்போது முகக்கவசம் கட்டாயம்

புதுடெல்லி

விமானப் பயணத்தின் போது, கட்டாயம் முகக்கவசம் அணிய வேண்டும் என இந்திய விமானப் போக்குவரத்து ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளது.

புதுடெல்லி உயர்நீதிமன்ற நீதிபதி ஹரிசங்கர், அண்மையில் விமானப் பயணம் மேற்கொண்ட போது, கொவிட் -19 பெருந்தொற்று விதிமுறைகள் எதுவும் பின்பற்றப்படாதது குறித்து புகார் எழுப்பியிருந்தார். புதுடெல்லி உயர்நீதிமன்றம், தாமாக வழக்குப்பதிவு செய்து, விசாரணை நடத்தியது. முகக்கவசம் அணியாதவர்களை, ‘விமானத்தில் பயணம் செய்யக் கூடாதவர்கள்’ பட்டியலில் சேர்க்க வேண்டும் என நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

இதையடுத்து, விமான பயணத்தின் போது, முகக்கவசம் அணிவதை இந்திய விமான போக்குவரத்து ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு கட்டாயமாக்கியுள்ளது.



## தாயை சுட்டுக் கொன்ற சிறுவன்

லக்னோ

உத்தர பிரதேசத்தில் திறன்பேசியில் ‘பப்ஜி’ விளையாடியதைக் கண்டித்த தாயை, சிறுவன் சுட்டுக் கொன்றுள்ளான்.

16 வயது சிறுவன் ‘பப்ஜி’ விளையாட்டுக்கு அடிமையாகி உள்ளான். இதைக் கண்டித்த தாயை, அந்தச் சிறுவன் துப்பாக்கியால் சுட்டுக் கொலை செய்தான். பின்னர், தாயின் உடலை அறையில் மறைத்து வைத்தான். இரண்டு நாள்கள் கழித்து, உடலில் இருந்து துர்நாற்றம் அடித்ததால், மேற்கு வங்கத்தில் உள்ள தனது தந்தைக்கு, தகவல் தெரிவித்துள்ளான்.

இதையடுத்து, பொலிஸார் வந்து விசாரித்த போது, தாயை சுட்டுக் கொன்றதை சிறுவன் ஒப்புக் கொண்டான். சிறுவனின் தந்தை, மேற்கு வங்கத்தில் இராணுவ அதிகாரியாக பணிபுரிகிறார்.

கொமர்ஷல் வங்கியின் ‘உதார’

# சிரேஷ்ட பிரஜைகள் கணக்கு விரிவாக்கம்

கொமர்ஷல் வங்கி, தனது ‘உதார’ சிரேஷ்ட பிரஜைகள் கணக்கை, புதிய பண்புகளுடனும் விஷேட வட்டி வீதத்துடனும் மீள் அறிமுகம் செய்துள்ளதாக கொமர்ஷல் வங்கி அறிவித்துள்ளது. கணக்கு வைத்திருப்பவர்களின் தளத்தை விஸ்தரிக்கும் வகையிலும், இந்த வாடிக்கையாளர் பிரிவுக்கு மேலும் வெகுமதிகளை வழங்கும் வகையிலும் இந்நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.



‘உதார’ சேமிப்புக் கணக்கொன்றை திறப்பதற்காகத் தேவைப்படும் ஆகக் குறைந்த தொகையை வங்கி, 5,000 ரூபாயில் இருந்து 1,000 ரூபாயாகக் குறைத்துள்ளது. ‘உதார’ நிரந்தர வைப்பும் 10,000 ரூபாய்க்கு மேற்பட்ட தொகையில் தொடங்கப்படும் என வங்கி அறிவித்துள்ளது.

தற்போதைய கணக்குப் புத்தகத்துக்கு மேலதிகமாக சேமிப்புக் கணக்கு வங்கிக் கூற்றும் இந்தப் பிரிவுக்கு வழங்கப்படும். இலத்திரனியல் பாஸ்புக், இலத்திரனியல் வங்கிக் கூற்று வசதிகள் என்பனவும் இலவசமாக வழங்கப்படும்.

‘உதார’ சேமிப்புக் கணக்கு, நிரந்தர வைப்புக் கணக்கு ஆகியவற்றை வைத்திருப்பவர்கள், விஷேட வட்டி வீதம் ஒன்றையும் அனுபவிக்கவுள்ளனர். இது வழமையான சேமிப்பு மற்றும் நிரந்தர வைப்புக் கணக்குகளின் வட்டி வீதத்தைவிட அதிகமாகும். மேலும், ‘உதார’ வாடிக்கையாளர்கள், எந்தவொரு கொமர்ஷல் வங்கிக் கிளையிலும் முன்னுரிமை அடிப்படையிலான சேவைகளையும் பெற்றுக் கொள்வர். தமது பாஸ்புக், டெபிட் கார்ட், விஷேட அடையாள அட்டையைக் காட்டி இந்த முன்னுரிமை சேவையைப் பெற்றுக் கொள்ள முடியும் எனவும் வங்கி அறிவித்துள்ளது.

கொழும்பில் உள்ள தனது நீட் அவனியு கிளையில் உள்ள மருந்து விற்பனை நிலையத்தில் மருந்துகளைப் பெற்றுக் கொள்ளும் ‘உதார’ கணக்கு வாடிக்கையாளர்களுக்கு, கழிவுகள் வழங்கப்படும். அதேபோல், தனது பங்குடமை ஆஸ்பத்திரிகள் மூலம் ‘உதார’ வாடிக்கையாளர்களுக்கு குறிப்பிட்ட காலத்துக்குரிய பகுதிகளில் பிரத்தியேகமான கழிவுகளும் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இவை தவிர, சிரேஷ்ட பிரஜைகளுக்கான ‘உதார’ கணக்குகளை வைத்திருக்கும் வாடிக்கையாளர்களுக்கு, வருடம் முழுவதும் கழிவுகளை உள்ளடக்கிய விஷேட டெபிட் கார்ட் ஒன்றும் இலவசமாக வழங்கப்படும். கொம்பாங்க் டிஜிட்டல், மொபைல் வங்கிச் சேவை, SMS அறிவித்தல்கள் என்பனவும் பதிவுக் கட்டணங்கள் இன்றியும், முதல் வருட வங்கிக் கட்டணங்கள் இன்றியும் வழங்கப்படும் என வங்கி மேலும் அறிவித்துள்ளது.

செலான் வங்கி, சிறுவர்கள் மத்தியில்

# இயற்கை பாதுகாப்பு பற்றிய நடவடிக்கைகள் முன்னெடுப்பு




செலான் வங்கி, வனஜீவராசிகள் மற்றும் இயற்கை பாதுகாப்பு சங்கம் (WNPS) உடன் பங்காண்மையை ஏற்படுத்தி, ‘Wild Kids’ திட்டத்தை முன்னெடுத்திருந்தது. இதனூடாக கொழும்பு, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களைச் சேர்ந்த சிறுவர்கள் மத்தியில் இயற்கை பாதுகாப்பு தொடர்பான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

கொழும்பில், ‘ஈரநில பூங்கா நடை’ நிகழ்வில் 50 க்கும் அதிகமான சிறுவர்கள் பங்கேற்றிருந்தனர். ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே பகுதியில் இந்த நிகழ்வு இடம்பெற்றது. மரங்கள், விலங்குகள், ஈரநிலைத்தில் அவற்றின் நடத்தைகள் தொடர்பில் இந்த நடையின் போது, அவர்கள் அவதானித்திருந்தனர்.

விசேடத்துவமான வழிகாட்டல்களினூடாக ஈரநிலங்களின் சூழல் கட்டமைப்பு பற்றி இந்தச் சிறுவர்கள் அறிந்து கொண்டனர். அவர்களுக்கு விளையாட்டுகளில் ஈடுபட வாய்ப்பு வழங்கப்பட்டிருந்ததுடன், இயற்கையைப் பாதுகாப்பது தொடர்பில் அவர்களை தொடர்ந்தும் ஈடுபடுத்துவதற்காக செலான் டிக்கிரியால் வெகுமதிகளும் வழங்கி ஊக்குவிக்கப்பட்டிருந்தனர்.

செலான் டிக்கிரி மற்றும் Fox Resort ஆகியவற்றின் பங்காண்மையின் கீழ், யாழ்ப்பாணத்தில் ஓவிய பயிற்சிப்பட்டறை மற்றும் போட்டியான ‘ஓவியத்தினூடாக இயற்கை’ என்பது முன்னெடுக்கப்பட்டிருந்தது. மூன்று வெற்றியாளர்கள் தெரிவு செய்யப்பட்டு, அவர்களுக்கு டிக்கிரி கணக்குகள் மற்றும் பணப் பரிசுகள் வழங்கப்பட்டிருந்ததுடன், பெறுமதியான பரிசுகளும் வழங்கப்பட்டிருந்தன. Fox Resort ஹோட்டலில் காணப்படும் art gallery, அருங்காட்சியகம் போன்றன உள்ளடங்கலாக, இலவச சுற்றுப் பயண வசதியும் அவர்களுக்கு ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டிருந்தது. செலான் வங்கியின் யாழ்ப்பாண பிராந்திய முகாமையாளர் நிர்மலன் நந்தகுமார் சிறுவர்களுடன் உரையாடியிருந்ததுடன், தமது எதிர்காலத்துக்காக சேமிப்பதுடன், சூழலை பாதுகாக்க வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியதன் முக்கியத்துவம் பற்றி வலியுறுத்தியிருந்தார்.

நிதிச் சேவைகளை வழங்கும் நிறுவனம் எனும் வகையில், சிறுவர்கள் மத்தியில் சேமிப்புப் பழக்கத்தை ஊக்குவிக்கும் நடவடிக்கைகளை செலான் டிக்கிரி முன்னெடுப்பதுடன், எதிர்காலத்துக்குத் தம்மை தயார்படுத்திக் கொள்வது பற்றியும் அறிவூட்டுகின்றது. சமூகப் பொறுப்பு வாய்ந்த நிறுவனம் எனும் வகையில், அன்புடன் அரவணைக்கும் வங்கியால், இயற்கை பாதுகாப்பு தொடர்பில் இந்த ஊக்கமளிப்பு மேற்கொள்ளப்படுவதுடன், புவியை பாதுகாப்பது தொடர்பிலும் சிறுவர்கள் பயில்கின்றனர்.

WNPS உடனான பங்காண்மையில் செலான் வங்கியால் முன்னெடுக்கப்படும் தொடர் செயற்றிட்டங்களின் அங்கங்களாக இந்த இரு திட்டங்களும் அமைந்துள்ளன.

உலகின் மூன்றாவது பழைமையான இயற்கைப் பாதுகாப்பு சங்கமாக WNPS அமைந்துள்ளது. ‘Wild Kids’ திட்டத்தினூடாக, சிறுவர்கள் மத்தியில் சூழல் தொடர்பான ஈடுபாட்டை கட்டியெழுப்ப எதிர்பார்க்கப்படுவதுடன், கல்வி மற்றும் களிப்பூட்டும் செயற்பாடுகளினூடாக பாதுகாப்பு தொடர்பான முக்கியத்துவம் உணர்த்தப்படுகின்றது.

சிறுவர்களின் ஆக்கத்திறன், புத்தாக்க அம்சங்களைத் தூண்டி, அவர்கள் மத்தியில் சேமிப்பு பழக்கத்தை ஊக்குவிக்கும் செயற்பாடுகளை செலான் டிக்கிரி தொடர்ந்தும் முன்னெடுக்கின்றது. அதன் பிரகாரம், டிக்கிரி கணக்குதாரர்களுக்கு கல்வி, களிப்பூட்டும் செயற்பாடுகள் பலவற்றில் பங்கேற்கக்கூடியதாக இருக்கும் என்பதுடன், அதனூடாக டிக்கிரி அன்பளிப்புகள், அன்பளிப்பு வவுச்சர்களையும் வெற்றியீட்டக் கூடியதாக இருக்கும்.

‘Wild Kids’ போன்ற பிரத்தியேகமான அனுகூலங்களினூடாக, சிறுவர்களுக்கு சிறு வயது முதல், சமூகத்தில் பொறுப்பு வாய்ந்தவர்களாகத் திகழ்வதற்கு வலுவூட்டப்படுவதுடன், சிறந்த பழக்கங்களை தூண்டுவதாகவும் அமைந்துள்ளது.

அவுஸ்திரேலியாவுக்கு எதிரான

# தொடரை இழந்த இலங்கை

அவுஸ்திரேலியாவுக்கு எதிரான இருபதுக்கு - 20 சர்வதேசப் போட்டித் தொடரை இலங்கை இழந்துள்ளது.

மூன்று போட்டிகள் கொண்ட இத்தொடரில், கொழும்பு ஆர் பிரேமதாஸ மைதானத்தில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற இரண்டாவது போட்டியிலும் தோற்றமையைத் தொடர்ந்தே இன்னும் ஒரு போட்டி இருக்கையிலேயே தொடரை இலங்கை பறிகொடுத்தது.

இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற அவுஸ்திரேலியாவின் அணித்தலைவர் ஆரோன் பின்ஞ், தமதணி முதலில் களத்தடுப்பிலீடுபடும் என அறிவித்தார்.

அந்தவகையில் முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை, ஆரம்பத்திலேயே தனுஷ்க குணதிலக, பதும் நிஸங்கவை கிளென் மக்ஸ்வெல், ஜஹை றிச்சர்ட்ஸனிடம் இழந்தது.

பின்னர் சரித் அஸலங்கவின் 39 (33), குசல் மென்டிஸின் 36 (36) ஓட்டங்கள் மூலம் இனிங்ஸ் நகர்ந்தபோதும் இவர்கள் இருவரும் குறிப்பிட்ட இடைவெளியில் மக்ஸ்வெல், ஜஹை றிச்சர்ட்ஸனிடம் வீழ்ந்ததோடு, அடுத்து வந்த பானுக ராஜபக்‌ஷவும் சிறிது நேரத்தில் கேன் றிச்சர்ட்ஸனிடம் வீழ்ந்தார். தொடர்ந்து வனிடு ஹஸரங்க, அணித்தலைவர் தசுன் ஷானக, துஷ்மந்த சமீர, சாமிக கருணாரத்ன ஆகியோர் அடுத்தடுத்து ஜஹை றிச்சர்ட்ஸன், கேன் றிச்சர்ட்ஸனிடம் (3) வீழ்ந்த நிலையில் 20 ஓவர்களில் 9 விக்கெட்டுகளை இழந்து 124 ஓட்டங்களையே இலங்கை பெற்றது.



பந்துவீச்சில், கேன் றிச்சர்ட்ஸன் 4-0-30-4, ஜஹை றிச்சர்ட்ஸன் 4-0-26-3, கிளென் மக்ஸ்வெல் 3-0-18-2, ஜொஷ் ஹேசில்வூட் 4-1-16-0, அஸ்தன் அகர் 4-0-27-0, மிற்செல் மார்ஷ் 1-0-7-0 என்ற பெறுதிகளைக் கொண்டிருந்தனர்.

பதிலுக்கு 125 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலியா, பின்ஞ்சின் 24 (13) ஓட்டங்கள் மூலம் வேகமான ஆரம்பத்தைப் பெற்றது. எனினும் அவரும், அடுத்து வந்த மிற்செல் மார்ஷும் சிறிது இடைவெளியில் ஹஸரங்கவிடம் வீழ்ந்தனர். அடுத்து வந்த ஸ்டீவ் ஸ்மித்தும் உடனேயே நுவான் துஷாரவிடம் வீழ்ந்ததோடு, சிறிது நேரத்தில் டேவிட் வோர்னரும் 21 (10) ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

பின்னர் சிறிது நேரத்தில் மார்க்கஸ் ஸ்டொய்னிஸ் துஷ்மந்த சமீரவிடன் வீழ்ந்ததோடு, தொடர்ந்து ஹஸரங்கவிடம் ஒரே ஓவரில் மக்ஸ்வெல்லும், அகரும் வீழ்ந்தனர்.

எவ்வாறெனினும், மத்தியூ வேட்டின் ஆட்டமிழக்காத 26 (26), ஜஹை றிச்சர்ட்ஸனின் இணைப்பாட்டத்தால் 17.5 ஓவர்களில் 7 விக்கெட்டுகளை இழந்த நிலையில் அவுஸ்திரேலியா வெற்றியிலக்கையடைந்தது. பந்துவீச்சில், அஸலங்க 3-0-7-0 என்ற பெறுதியைக் கொண்டிருந்தார்.

இப்போட்டியின் நாயகனாக வேட் தெரிவானார்.

இரண்டு அணிகளுக்குமிடையிலான மூன்றாவது போட்டியானது பல்லேகலவில் நாளை (11) இரவு 7 மணிக்கு நடைபெறவுள்ளது.

வல்வை வி.க தொடர்:

## அரையிறுதியில் குருநகர் பாடுமீன்




வல்வை விளையாட்டுக் கழகம், தனது வைர விழாவை முன்னிட்டும் மறைந்த வீரர்கள் ஞாபகார்த்தமாகவும் நடத்தும் 9 நபர் கொண்ட மாபெரும் வடமாகாண ரீதியிலான கால்பந்தாட்டத் தொடரின் அரையிறுதிப் போட்டிக்கு குருநகர் பாடுமீன் விளையாட்டுக் கழகம் தகுதி பெற்றுள்ளது.

> **வல்வை விளையாட்டுக் கழகம், தனது வைர விழாவை முன்னிட்டும் மறைந்த வீரர்கள் ஞாபகார்த்தமாகவும் நடத்தும் 9 நபர் கொண்ட மாபெரும் வடமாகாண ரீதியிலான கால்பந்தாட்டத் தொடரின் அரையிறுதிப் போட்டிக்கு குருநகர் பாடுமீன் விளையாட்டுக் கழகம் தகுதி**

நேற்று முன்தினம் மாலை நடைபெற்ற கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழகத்துடனான போட்டியில் 2-1 என்ற கோல் கணக்கில் வென்றமையைத் தொடர்ந்தே குழு பியிலிருந்து ஏழு புள்ளிகளுடன் பாடுமீன் விளையாட்டுக் கழகம் அரையிறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றுள்ளது.

பாடுமீன் சார்பாக, லியோ, தினேஸ்குமார் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றதோடு, றேஞ்சர்ஸ் சார்பாகப் பெறப்பட்ட கோலை ஈழவேந்தன் பெற்றார்.

இப்போட்டியின் நாயகனாக பாடுமீனின் முன்களவீரர் கீதன் தெரிவானார்.

## திருகோணமலை மண்ணுக்கு பெருமை சேர்த்த பிரதீஷா

■ தீஷான் அஹமட்

திருகோணமலை, சல்லி அம்பாள் மகா வித்தியாலய மாணவியான அருட்செல்வன் பிரதீஷா என்பவரே தேசிய ரீதியான போட்டியில் இரண்டாம் இடம் பெற்றுள்ளார்

கொழும்பு சுகததாஸ மைதானத்தில் இடம்பெற்றுவரும் கனிஷ்ட தேசிய தடகள போட்டியில் திருகோணமலை சல்லி அம்பாள் மகா வித்தியாலயத்தில் இருந்து முதன் முதலாக மாணவர்கள் இருவர் பங்குபற்றி இருந்தார்கள்.

இதில் 20 வயதுக்குட்பட்ட பெண்கள் பிரிவில் இடம்பெற்ற 3000m Steeplechase நிகழ்வில் பிரதீஷா இரண்டாம் இடத்தை பெற்றுக்கொண்டுள்ளார்.



இதில் பயிற்சி பெற்றுக்கொள்ள தரமான மைதானம் இல்லாது, அந்த நிகழ்ச்சிக்குரிய உபகரணங்கள் இல்லாது, கிடைத்த இடத்தில் கிடைத்த பொருட்களை கொண்டு தனது பயிற்சியை பிரதீஷா மேற்கொண்டு இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

முதலாவது ஒருநாள் சர்வதேசப் போட்டியில்

## மேற்கிந்தியத் தீவுகளை வென்ற பாகிஸ்தான்

மேற்கிந்தியத் தீவுகளுக்கெதிரான மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரில், முல்தானில் நேற்று முன்தினம் நடைபெற்ற முதலாவது போட்டியில் பாகிஸ்தான் வென்றது.

நாணயச் சுழற்சி: மே. தீவுகள்

மே. தீவுகள்: 305/8 (50 ஓவ. ) (துடுப்பாட்டம்: ஷே ஹோப் 127 (134), ஷமராஹ் ப்ரூக்ஸ் 70 (83), றொவ்மன் பவல் 32 (23), றொமாறியோ ஷெப்பர்ட் 25 (18) ஓட்டங்கள். பந்துவீச்சு: ஹரிஸ் றாஃப் 4/77 [10], ஷகீன் ஷா அஃப்ரிடி 2/55 [10], ஷடாப் கான் 1/37 [10], மொஹமட் நவாஸ் 1/61 [10])

பாகிஸ்தான்: 306/5 (49.2 ஓவ. ) (துடுப்பாட்டம்: பாபர் அஸாம் 103 (107), இமாம்-உல்-ஹக் 65 (71), மொஹமட் றிஸ்வான் 59 (61), குஷ்டில் ஷா ஆ.இ 41 (23) ஓட்டங்கள். பந்துவீச்சு: அல்ஸாரி ஜோசப் 2/55 [10], அகீல் ஹொஸைன் 1/50 [10], ஜேடன் சியல்ஸ் 1/53 [9.2], றொமாறியோ ஷெப்பர்ட் 1/70 [9])

போட்டியின் நாயகன்: குஷ்டில் ஷா



பாகிஸ்தான்

# திருமண நிகழ்ச்சிகளுக்கு புதுவிதத் தடை

பாகிஸ்தானில் கடுமையான நிதி நெருக்கடி ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக உலக வங்கியிடம் கடனுதவி அளிக்கும்படி பாகிஸ்தான் கோரிக்கை விடுத்து வருகிறது.

இதற்கிடையில், நிதி நெருக்கடி, இதர காரணங்களால் நாட்டின் பல்வேறு பகுதிகளில் பல மணி நேரம் மின்வெட்டு நீடித்து வருகின்றது.

இந்நிலையில், மின்சாரத்தை மிச்சப்படுத்த பாகிஸ்தான் அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

அந்த வகையில் நாடு முழுவதும் உள்ள சந்தைகளில் நேர கட்டுப்பாடு விதிக்க அரசு முடிவு செய்துள்ளது.



அதன்படி, நாடு முழுவதும் உள்ள சந்தைகள், இனி இரவு 8.30 மணிக்கு மேல் செயற்படத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

மேலும், இஸ்லாமாபாத் நகரில் இரவு 10 மணிக்கு மேல் திருமண நிகழ்ச்சிகள் நடத்தவும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

பிரித்தானியா

## உயிர்காத்த ஓவியம்

இலண்டனைச் சேர்ந்த 90 வயதான மூதாட்டியொருவரின் உயிரை ஓவியமொன்று காப்பாற்றிய சம்பவம் ஆச்சியத்தை ஏற்படுத்தியுள்ளது.

90 வயதான குறித்த மூதாட்டி டிமென்ஷியா எனப்படும் நோயால் பாதிக்கப்பட்டிருந்தார்.

இதனால் அவரை பராமரிக்கவும் மருத்துவ செலவுகளுக்கும் நிதி தேவைப்பட்டதால், வேறுவழியின்றி அவரது குடும்பத்தினர் அவரது வீட்டையே விற்க முடிவெடுத்துள்ளனர்.

இதையடுத்து ஏல நிறுவனமொன்றை அவர்கள் நாடியுள்ள நிலையில் அவ்வீட்டை பார்வையிட வந்த அந்நிறுவனத்தைச் சேர்ந்தவர், அம் மூதாட்டியின் கட்டிலின் மேலே தொங்கவிடப்பட்டிருந்த ஓவியத்தை பார்த்து அச்சரியத்தில் உறைந்துள்ளார்.

ஏனெனில், குறித்த ஓவியமானது 16 ஆம் நூற்றாண்டை சேர்ந்த பிலிப்பினோ லிப்பி என்னும் பிரபல ஓவியரால் வரையப்பட்டது எனக் கூறப்படுகின்றது.



குறித்த ஓவியம் எங்கே இருக்கிறது என்பதே பலருக்கும் தெரியாமல் இருந்துள்ள நிலையில், தற்போது பல வருட தேடலுக்கு விடை கிடைத்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து சமீபத்தில் நடைபெற்ற ஏலத்தில் இந்த ஓவியம் 2,55,000 யூரோக்களுக்கு விற்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்கா



## கின்னஸில் பெப்பல்ஸ்

உலகின் மிக வயதான நாய் என்ற கின்னஸ் சாதனையை அமெரிக்காவின் தெற்கு கரோலினா மாகாணத்தைச் சேர்ந்த பெப்பல்ஸ் என அழைக்கப்படும் Fox Terrier இன நாய் பெற்றுள்ளது.

பொதுவாக நாய்களுக்கான வாழ்நாள் 10 - 15 ஆண்டுகளாகவே கருதப்படும் நிலையில், இந்நாய்க்கு தற்போது 22 வயது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், இந்நாயின் உரிமையாளர்களான பாபி மற்றும் ஜூலை கிரோகோரி தம்பதி, இது குறித்துக் கருத்துத் தெரிவிக்கையில் "இது எங்களுக்கும் மாபெரும் பெருமையாகும். பெப்பெல்ஸ் இத்தனை ஆண்டுகளாக எங்களின் வாழ்க்கையை அழகானதாக வைத்துள்ளது.

22 ஆண்டுகளுக்கு முன்னர் முதல் முதலாக இவளை பார்த்தபோதே மிகவும் பிடித்துவிட்டது. 22 ஆண்டுகளில் பல மகிழ்ச்சியையும் சில துக்கங்களையும் எங்கள் நாய் கண்டுள்ளது.

இதன் இணை ராக்கி, 2017ஆம் ஆண்டு உயிரிழந்த போது மாபெரும் துக்கத்தில் சிக்கித் தவித்தது. பின்னர் சில மாதங்களில் தேறிவிட்டது" என்றனர்.

ஈரான்


ரயில் தடம் புரண்டதில் கோர விபத்து;

## 22 பேர் உயிரிழப்பு

தெற்கு ஈரான் நோக்கி சென்ற பயணிகள் ரயில் தண்டவாளம் அருகே இருந்த மணல் அள்ளும் இயந்திரத்தின் மீது மோதி தடம் புரண்டதில் 22 பேர் உயிரிழந்தனர்.

முன்தினம் (08) டாபாஸ் நகரில் இருந்து யாஸ்த் நகர் நோக்கி, சுமார் 350 பயணிகளுடன் பயணித்த ரயிலே இவ்வாறு விபத்துக்குள்ளாகி உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்விபத்தில் 90 பேர் படுகாயங்களுக்குள்ளான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.



ஹெலிகொப்டர் மூலம் மீட்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்கா

## IBM நிறுவனம் அதிரடி அறிவிப்பு




உலக நாடுகளின் எதிர்ப்பையும் மீறி கடந்த 3 மாதங்களுக்கும் மேலாக உக்ரேன் மீது ரஷ்யப் படைகள் தாக்குதல் நடத்தி வருகின்றன.

இந்நிலையயில் உக்ரேன் மீதான ரஷ்யாவின் தாக்குதல்களுக்கு கண்டனம் தெரிவிக்கும் விதமாக ரஷ்யாவில் உள்ள அமெரிக்காவைச் சேர்ந்த பிரபல கணினி நிறுவனமான ஐ.பி.எம் ரஷ்யாவை விட்டு வெளியேறுவதாக அறிவித்துள்ளது.

ரஷ்யாவில் மார்ச் முதல் தனது செயற்பாட்டை நிறுத்தி வைத்திருந்த போதும் அந்நிறுவனம் ஊழியர்களுக்கு ஊதியம் வழங்கி வந்ததாகக் கூறப்படுகின்றது.

இந்நிலையில் ஐ.பி.எம் தலைமைச் செயல் அதிகாரி அரவிந்த் கிருஷ்ணா விடுத்துள்ள செய்தியில், ரஷ்யாவில் தங்கள் செயற்பாட்டை முடித்துக் கொள்வதாகக் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் போரால் நிலையற்ற சூழல் நீடிப்பதால் இந்த முடிவை எடுக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

உக்ரேன்

2 கட்டடங்களில் இருந்து

## 100 உடல்கள் மீட்பு

உக்ரேன் மீது ரஷ்யா நடத்தி வரும் போரில் ஆயிரக்கணக்கான பொதுமக்கள், இராணுவ வீரர்கள் உயிரிழந்துள்ளனர்.

இந்நிலையில், போர் தொடங்கியது முதல் உக்ரேன் மீது 2, 100 ஏவுகணைகளை ரஷ்யா ஏவி உள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

வைஸ்கார்ட் என்ற அமைப்பு சேரித்த தகவல்களின்படி, ரஷ்யா நடத்திய தாக்குதலில் 5 கட்டடங்கள் சேதமடைந்தன. அவற்றில் 2 கட்டடங்களில் நடந்த தேடுதல் பணியில் 50 முதல் 100 உடல்கள் மீட்கப்பட்டன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



பாகிஸ்தான்

## பாகிஸ்தானில் கோர விபத்து; 22 பேர் உயிரிழப்பு

பாகிஸ்தானின் பலுசிஸ்தான் மாகாணத்தில் வேகக் கட்டுப்பாட்டை இழந்த வேன், பள்ளமொன்றில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 22 பேர் உயிரிழந்தனர்.

நேற்று முன்தினம் (08) பலுசிஸ்தானின் லோராலியாவில் இருந்து சோப் நகரை நோக்கி பயணித்த வேன், இவ்வாறு அக்தர்சாய் மலைப்பகுதியில் இருந்து கவிழ்ந்து விபத்துக்குள்ளாகி உள்ளது.

இக்கோர விபத்தில் வேனில் பயணித்த 22 பேரும் உயிரிழந்துள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.



விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டால் வெள்ளிக்கிழமை, 10 ஜூன் 2022, இல. 08, ஹுணுபிட்டி குறுக்கு வீதி, கொழும்பு-02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.